ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ செப்டம்பர். 20, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 348 ❖ ரூ.10

புதிய நாடாளுமன்றத்தின் மக்களவையில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு மசோதா

# தாக்கல்

## வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது பெரும்பான்மை இல்லாத காரணத்தால் மசோதா நிறைவேறாமல் போனது; பிரதமர் மோடி



புதுடெல்லி , செப். 20-

சட்டமன்றங்கள் மற்றும் நாடாளுமன்றத்தில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்க வழி செய்யும் மசோதா, புதிய நாடாளுமன்றத்தின் மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டிடம் நேற்று முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. முன்னதாக, காலை நாடாளுமன்றம் பழைய நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் கூடியது. அப்போது, பழைய நாடாளுமன்றத்தில் இருந்து விடை பெறும் முன்பாக அதன் பெருமைகள் குறித்த மலரும் நினைவுகளை தலைவர்கள் பகிர்ந்து கொண்டனர். இதனையடுத்து, பிற்பகல் நாடாளுமன்றம் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தில் தொடங்கியது.

சபாநாயகர் ஓம்பிர்லா தலைமையில் மக்களவை கூடியதும் முதல் நிகழ்வாக, மகளிருக்கு சட்டப்பேரவைகளிலும் நாடாளுமன்றத்திலும் 33% இடஒதுக்கீடு வழங்குவதற்கான மசோதா தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசினார். பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் இந்த மசோதாவுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தர வேண்டும் என்று அப்போது அவர் கோரிக்கை விடுத்தார்.

மசோதாவுக்கு ஆதரவாகப் பேசிய பிரதமர் மோடி, "பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நீண்ட காலமாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. எனினும், பெரும்பான்மை இல்லாத காரணத்தால் மசோதா நிறைவேறாமல் போனது. எனவே, அந்தக் கனவு இன்னமும் அப்படியே நீடிக்கிறது. இன்று, இதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை கடவுள் நமக்குக் கொடுத்துள்ளார். எனவே, பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் மசோதாவை நமது அரசு தற்போது கொண்டு வந்துள்ளது. ஜனநாயகத்தை வலுப்படுத்த உறுப்பினர்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவு அளிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

முன்னதாக, நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் மகளிருக்கு 33% இடஒதுக்கீடு வழங்கும் இந்த மசோதாவுக்கு மத்திய அமைச்சரவை திங்கள்கிழமை ஒப்புதல் அளித்தது. பிரதமர் மோடி தலைமையில் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் இந்த சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்த நிலையில் நாடாளுமன்றத்தின் மக்களவையில் இந்த மசோதா நேற்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டத் தொடரில் வரலாற்று சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கப்படும் என்று பிரதமர் மோடி பேசியிருந்த நிலையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே மாநிலங்களவையில் இந்த மசோதா ஒப்புதல் பெற்றுள்ளது என்பதால், இனி மக்களவையில் ஒப்புதல் பெற வேண்டியது இருக்கும். திருத்தங்கள் இருப்பினும், அந்தத் திருத்தங்களுக்கு மாநிலங்களவையில் ஒப்புதல் பெற வேண்டிய அவசியம் ஏற்படும்.

## நாகுடி ஊராட்சியில் தூய்மையே சேவை என்ற திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன் நேரில் பார்வையிட்டார்



அறந்தாங்கி,செப்.20-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் நாகுடி ஊராட்சியில் தூய்மையே சேவை என்ற இலக்கினை மேம்படுத்தும் வகையில் நடைபெற்று வரும் பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தூய்மை பணியாளர், பணித்தள பொறுப்பாளர்கள் மற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பொதுமக்களிடம் கிராமப்புறங்களில் சுகாதாரத்தை பின்பற்றுவது தொடர்பாக எடுத்துரைத்தார், அப்போது மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இறையருள், கிருஷ்ணகுமார், மதியழகன், மல்லிகா மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர் நல்லையா நாகுடி ஊராட்சி செயலர் (பொறுப்பு) மாங்குடி கணேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## கொடநாடு விவகாரத்தில் கனகராஜின் சகோதரர் தனபாலுக்கு எதிராக வழக்கு

### பழனிசாமிக்கு ஐகோர்ட் அனுமதி



சென்னை, செப். 20-

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி பேச, கனகராஜின் சகோதரர் தனபாலுக்கு தடை விதிக்க கோரி வழக்குதொடர முன்னாள் முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமிக்கு அனுமதியளித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, சாலை விபத்தில் உயிரிழந்த கனகராஜின் சகோதரர் தனபால், சமீப காலமாக, அந்த வழக்கு தொடர்பாக பேட்டியளித்து, அதன் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் தன்னை தொடர்புபடுத்தி பேச தனபாலுக்கு தடை விதிக்கக் கோரியும், ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய் மான நஷ்ட ஈடு வழங்கக் கோரியும் முன்னாள் முதல்வரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி சென்னை உயர் நீதின்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில், கட்சியின் பொதுச்செயலாளராக பொறுப்பேற்றுள்ள நிலையில், தன் நற்பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் தனபால் பொய்யான தகவல்களைக் கூறி வருவதாக கூறப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் கட்சிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை குலைக்கும் நோக்கத்தில், தனது அரசியல் எதிரிகளின் தூண்டுதலால் தனபால் இதுபோல் பேட்டிகள் அளித்து வருவதாகவும் மனுவில் எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்சியுள்ளார்.

கொடநாடு வழக்கில் சாட்சிகளைக் கலைத்ததாக கைது செய்யப்பட்ட தனபால், மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறி ஜாமீன் பெற்றுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்த வழக்கை தொடர்வதற்கான அனுமதியை கோரிய மனு நீதிபதி மஞ்சுளா முன் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி, வழக்கை தொடர்வதற்கு அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என். நேரு, பெரியசாமி, எ.வ. வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், அரசு துறைச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதிமுக கூட்டணி முறிவு

## முக்கிய நிர்வாகிகளுடன் அண்ணாமலை ஆலோசனை



சென்னை , செப். 20-

சென்னை பனையூரில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை நேற்றிரவு ஆலோசனை நடத்தினார். "பாஜகவுடன் கூட்டணி இல்லை. கூட்டணியைப் பொறுத்தவரையில், பாஜக அதிமுக கூட்டணியில் இல்லை" என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் அறிவித்த நிலையில் அண்ணாமலையின் ஆலோசனை கூட்டம் நடந்தது.

பாஜகவின் அமைப்பு செயலாளர் கேசவ விநாயகம் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். தொடர்ச்சியாக மாநில நிர்வாகிகளிடமும் அண்ணாமலை ஆலோசனை நடத்தியதாக சொல்லப்படுகிறது. இன்று பொள்ளாச்சி மற்றும் வால்பாறையில் 'என் மண்; என் மக்கள்' யாத்திரை நடைபெற இருக்கிறது. ஆலோசனையின் முடிவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்க அண்ணாமலை கோவை சென்றார்.

முன்னதாக அண்ணா குறித்த அண்ணாமலையின் பேச்சுக்கு விளக்கமளித்துள்ள பாஜக நிர்வாகிகள், "வரலாற்று பூர்வமான ஒரு தகவலையே அண்ணாமலை தெரிவித்துள்ளார். அண்ணா குறித்து தெரிவித்த கருத்துக்களுக்கு ஆதாரம் அவரிடம் இருக்கிறது. எனவே அவரது நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்க மாட்டார்" என்று தெரிவித்தனர்.

முன்னதாக, அண்ணாமலை அளித்த பேட்டியில், "இங்கேயும் லஞ்ச ஒழிப்புத்துறை உள்ளது. தமிழ்நாட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை மீது எல்லோருக்கும் பயம் உள்ளது. பாதுகாப்பு எல்லோருக்கும் தேவை தான். அதைமட்டும் நான் சொல்லுவேன். இன்றைக்கு ஒரு முடிவோடு தான் வந்துள்ளேன். கூட்டணி தேவை எல்லாருக்கும் உள்ளது.

எனக்கு கூட்டணி வேண்டாம் என சொல்வது என்ன போக்கு. கூட்டணி வேண்டாம் என்று யாரும் சொல்ல முடியாது. தனி மரம் என்றைக்கும் தோப்பாகாது. எல்லோருக்கும் எல்லோரும் தேவை. எல்லோருக்கும் அரசியல் பிரச்சினை உள்ளது. ஜனநாயகத்தில் அனைவரையும் ஒருங்கிணைத்து அனுசரித்து செல்ல வேண்டும். கூட்டணி வேண்டாம் என சொல்லக்கூடிய அளவுக்கு பலசாலிகளை தமிழ்நாட்டில் நான் பார்க்கவில்லை.

கூட்டணி வேண்டாம் என்று நாங்கள் நிர்பந்திக்கவில்லை. அவர்கள் கூறியதற்குதான் நான் பதில் கூறுகிறேன். வெற்றி, தோல்வியை விட தன்மானத்தோடு இருப்பது முக்கியம். வெற்றிக்காக எங்களது கொள்கைகளை விட்டுக்கொடுக்க முடியாது. நாங்கள் எல்லோரையும் அரவணைத்துதான் செல்கிறோம். யாரையும் சிறுமைப்படுத்தவில்லை. பேச்சை தரைகுறைவாக யார் தொடங்கியிருக்கிறார்கள் என்று பாருங்கள். செல்லூர் ராஜு, சிவி சண்முகம் மாதிரி பேசுபவர்கள் பாஜகவில் உள்ளனர். அவர்களை நாங்கள் பேச சொன்னால் என்னவாகும். அது தவறு. பிரச்சினையை நேருக்கு நேர் பேச வேண்டும். மேடை, மைக் இருக்கிறது என்பதற்காக வாய்க்கு வந்ததை பேசக்கூடாது" இவ்வாறு அண்ணாமலை தெரிவித்தார்.

## நேற்றைய நிலையே இன்றும் தொடரும்



புதுக்கோட்டை மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குனர் அலுவலகமானது. திங்கள்கிழமை பெய்த மழையின் காரணமாக தண்ணீர் தேங்கி கட்டிடத்தில் முகப்பு பகுதி மூழ்கியுள்ளதால் அலுவலகத்திற்கு பூட்டு போடப்பட்டுள்ளது.அதிகாரிகளே யாரும் அலுவலகத்திற்குள் செல்ல முடியாததால் சூழல் ஏற்ப்பட்டதால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர்.இந்த நிலையில் நேற்று இரவும் மழை தொடர்ந்ததால் அதே நிலை இன்றும் தொடரும் என எதிர்பாக்கப்படுகிறது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# தென்காசி மாவட்டம் சிவகிரி தாலுகா தாருகாபுரம் கிராமத்தில் பழங்கால முதுமக்கள் தாழி கண்டுபிடிப்பு



தென்காசி,செப்.20–

அகழ்வாய்வு செய்ய தொல்பொருள் ஆய்வுத்துறை மாணவர்கள் கோரிக்கை. தென்காசி மாவட்டம் தாருகாபுரம் பகுதியில் உள்ள மலைகளில் சரிவுகளில் முதுமக்கள் தாழி தற்போது கிடைக்கப்பட்டுள்ளது,

தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் பணியாளர்கள் ஓடைகளை தூர் வாரும் பணியில் ஈடுபட்ட போது ஆங்காங்கே முதுமக்கள் பயன்படுத்திய படிமங்கள் கிடைத்துள்ளது. இதனை எடுத்து தொல்பொருள் ஆய்வுத்துறை மாணவர் விஜயகுமார் என்பவர் இதனை அரசு தரப்புக்கு தெரியப்படுத்தி இந்திய தொல்பொருள் ஆய்வுத்துறை மற்றும் தமிழக அரசு இந்த முதுமக்கள்தாழியை ஆய்வு செய்து இப்பகுதிகளில் அகழாய்வு செய்ய வேண்டும்என கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் ஏற்கனவே தமிழகம் முழுவதும் நாகரீக வளர்ச்சியில் அடிப்படை படிமங்கள் கிடைத்துவரும் நிலையில் சிவகிரி அருகே உள்ள தாருகாபுரம் கிராம பகுதியில் உள்ள மலையடிவாரங்களில் கிடைத்துள்ள இந்த முதுமக்கள் தாழி தரவுகள் முக்கியம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அலுவலர் கார்த்தீஸ்வரி, கிராம உதவியாளர் ஜெகதாம்பிகை, தொல்லியல் துறை ஆய்வாளர் மற்றும் எழுத்தாளர் விஜயகுமார், நாகராஜன் ராஜேஸ்வரி தாருகாபுரம் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# குற்றாலத்தில் 15 அடி நீள ராஜ நாகம்–பொதுமக்கள் பீதி தீயணைப்பு படையினர் பிடித்து சென்றனர்



தென்காசி, செப்.20–

குற்றாலம் மெயின் அருவி பகுதியில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகம் அருகில் நடமாடி பொதுமக்களை அச்சுறுத்திய சுமார் 15 அடி நீளம் உள்ள ராஜ நாகத்தை தென்காசி தீயணைப்பு மற்றும் மீட்பு துறையினர் லாபகமாக பிடித்து வனப்பகுதியில் கொண்டு விட்டனர். குற்றாலம் திருக்குற்றால நாதர் சாமி திருக்கோவிலில் இந்துசமய அறநிலையத்துறை உதவி ஆணையர் அலுவலகம் அருகில் நடமாடிய 15 அடி நீளம் உள்ள ராஜநாகத்தை பார்த்து பொதுமக்கள் அச்சம் அடைந்தனர். இது பற்றி உதவி ஆணையர் அலுவலக

தலைமை கணக்கர் தென்காசி தீயணைப்பு மற்றும் மீட்பு துறை அலுவலருக்கு தகவல் தெரிவித்தார், தகவலறிந்த தென்காசி தீயணைப்பு நிலைய உதவி மாவட்ட அலுவலர் பிரதீப்குமார் தலைமையில் சிறப்பு நிலைய அலுவலர் கணேசன் மற்றும் தீயணைப்பு படைவீரர்கள் வெள்ளபாண்டியன், விஸ்வநாதன், சுந்தர், ஆகிய குழுவினருடன் விரைந்து சென்று பார்த்த போது ராஜநாகம் என அறியப்பட்டது. உடன் மாவட்ட அலுவலர் கணேசன் அறிவுரைப்படி, வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது, சம்பவ இடம் வந்த வனத்துறையினர் இந்த ராஜ நாகத்தை எங்களால் பிடிக்க இயலாது என்றும் தீயணைப்பு துறையினர் பிடித்து தந்தால் பெற்று கொள்வதாகவும் தெரிவித்தனர். உடனடியாக தென்காசி தீயணைப்பு துறை அலுவலர் மற்றும் பணியாளர்கள் தங்கள் உயிரை பணயம் வைத்து ராஜநாகத்தை லாவகமாக பிடித்தார்கள்.

இந்த ராஜநாகம் அளவீடு செய்யபட்டதில் 15 அடிக்கு மேல் இருந்தது, பிடிபட்ட பாம்பு அடர்ந்த வனப்பகுதியில் தீயணைப்புதுறையினரால் விடப்பட்டது, அதன் பின்னரே கோவிலுக்கு வந்த பக்தர்கள் கூடியிருந்த சுமார் 500 க்கும் மேற்பபட்ட பொதுமக்கள் இந்து சமய அறநிலையத்ததுறை அலுவலர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டார்கள். தீயணைப்புத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களின் வீர தீரம் மிக்க செயலை அனைவரும் வெகுவாக கைதட்டி ஆரவாரம் செய்து வாழ்த்தி பாராட்டினார்கள்.






▶ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் இந்து முன்னணி, வியாபாரிகள், பொதுமக்கள் மற்றும் பாரதிய ஜனதா கட்சி இணைந்து நடத்தும் 23 -வது விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடைபெற்றது. லாவண்யா ராமேஸ்வரன் பேரூராட்சி மன்றத் தலைவர் கொடியசைத்து விநாயகர் ஊர்வலத்தை துவக்கி வைத்தார், இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக எ. ஆனந்தன் மாநில துணைத்தலைவர்பிஜேபி வெளிநாடு அண்டை மாநில தமிழ் வளர்ச்சி பிரிவு, மணிகண்டன் தென்காசி மாவட்ட பொது செயலாளர் இந்து முன்னணி, எ. சுரேஷ் நெல்லை மாநகர் மாவட்டச் செயலாளர் இந்து முன்னணி, கு. தவமணி முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர், இரா. பரமசிவம் செயல் அலுவலர் பேரூராட்சி மன்றச் செயலார் வாசுதேவநல்லூர் மற்றும் பொதுமக்கள், பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# “மோடி மீண்டும் பிரதமராக மக்கள் விரும்புகின்றனர்” ஆர்.பி.உதயகுமார் கருத்து



மதுரை , செப்.20–

அதிமுக - பாஜக கூட்டணியில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், “பிரதமராக மீண்டும் மோடி வரவேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்” என்று முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கருத்து தெரிவித்துள்ளார்.

மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் மாலையில் சிறப்பு வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு உணவு வழங்கும் வகையில் 100 அரிசி மூட்டைகளை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் இன்று வழங்கினார். அதன்பின் செய்தியாளர்களிடம் ஆர்.பி.உதயகுமார் கூறியது: ''தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் வலதுபுறத்தில் கே.பழனிசாமியும், இடதுபுறத்தில் நட்டாஜியும் அமர்ந்திருக்கிறார்கள். இந்தியா கூட்டணியில் ஸ்டாலின் கிடைக்காத கவுரவமும், அங்கீகாரமும் எதிர்க்கட்சித் தலைவராக உள்ள கே.பழனிசாமிக்கு தேசிய கூட்டணியில் கிடைத்துள்ளது.

இந்தியா கூட்டணியில் மேற்கு வங்கம், கேரளாவில் கூட்டணி சேரமாட்டோம் என்று கம்யூனிஸ்ட் சொல்கிறது. டெல்லி, பஞ்சாப், குஜராத்தில் இந்தியா கூட்டணியில் ஆம் ஆத்மி கட்சியின் கருத்து வேறுபாடு உள்ளது. இப்படி முரண்பாடு எல்லோரிடத்திலும் உள்ளது. கே.பழனிசாமி நிதானத்தோடு, பெருமையாக விட்டுக் கொடுத்து வருகிறார். அண்ணாவின் பொன்மொழியான எதையும் தாங்கும் இதயம், கடமை கண்ணியம் கட்டுப்பாடு, குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை என்ற அண்ணாவின் அமுதமொழிகளை கடைப்பிடித்து வருகிறார்.

தொண்டர்களும், பொதுமக்களும் பிரதமராக மீண்டும் மோடி வரவேண்டும் நினைக்கிறார்கள். அதேபோல் தமிழகத்தின் முதலமைச்சராக கே.பழனிசாமி வரவேண்டும் என எதிர்பார்த்து வருகிறார்கள். திமுக மீது மக்கள் கோபத்தில் உள்ளனர். திமுகவை அகற்றப்பட வேண்டும். தலைவராக வர நினைப்பவர்கள் தலைமை தாங்கும் பொழுது நிதானம், பொறுமை, சகித்தன்மை என கடைப்பிடித்தால் தான் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள்'' என்று அவர் தெரிவித்தார்.

அதிமுக - பாஜக கூட்டணியில் விரிசல் ஏற்பட்டு, பாஜக மாநிலத் தலைவரை அதிமுகவின் முன்னாள் அமைச்சர்கள், இரண்டாம் கட்ட தலைவர்கள் கடுமையாக விமர்சித்துவரும் நிலையில் ஆர்.பி.உதயகுமார் திடீரென்று மோடி மீண்டும் பிரதமராக மக்கள் விரும்புகிறார்கள் என கூறியிருப்பது கவனம் பெற்றுள்ளது.

# உடையார்பாளையம் அருகே எம்.ஆர்.சி கலை அறிவியல் கல்லூரியில் நுரையீரல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கம்




அரியலூர்,செப்.20–

உடையார்பாளையம் அருகில் உள்ள, எம் ஆர் சி கலை அறிவியல் கல்லூரியில், நுரையீரல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கம் நடைபெற்றது.இது பற்றி கல்வி நிலைய தாளாளர் எம்.ஆர் ரகுநாதன் வெளியிட்ட செய்தி குறிப்பில்கூறியுள்ளதாவது:

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்,நுரையீரலைப் பாதுகாப்போம் என்ற தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

கருத்தரங்கில் பேராசிரியர்கள் வரதராஜன், சம்பத், சங்கீதா பபிலாதேவி, செந்தில்வேல், சதிஷ்குமார் ஆகியோர் பேசினார்கள். முடிவில் காட்சி தொடர்பியல் துறைத்தலைவர் சிலம்பரசன் நன்றி கூறினார்.



▶ மாவட்ட நிர்வாகம் மற்றும் காரைக்கால் போக்குவரத்து துறை சார்பாக அனைத்து அரசு கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி கற்கும் போதே பழகுனர் ஓட்டுநர் உரிமம் (L.L.R) வழங்கும் நிகழ்வு நேற்று மாலை அவ்வையார் அரசு பெண்கள் கல்லூரியில் போக்குவரத்து துறை அமைச்சர் சந்திரபிரியங்கா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முன்னிலை வகித்தார். மேலும் இந்நிகழ்வில் வட்டார போக்குவரத்து அதிகாரி த அங்காளன் கல்லூரியின் முதல்வர் பாலாஜி உதவி போக்குவரத்து அதிகாரி கல்விமாறன் மற்றும் பேராசிரியர்கள் மாணவிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் பாலாஜி வரவேற்புரை ஆற்றினார். மேலும் இந்நிகழ்வில் பேசிய மாவட்ட ஆட்சியர் மக்கள் சேவைகளில் அரசு ஊழியர்கள் இல்லம் தேடி சென்று உதவும் நோக்கத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்றும் முதன் முதலில் இந்நிகழ்வு மகளிர் கல்லூரியில் நடைபெறுவது பெருமைக்குரியது என்றும் கூறிய ஆட்சியர் மாணவ மாணவிகள் இருசக்கர வாகனங்களை ஓட்டும் போதும் அதில் பயணிக்கும் போதும் கண்டிப்பாக ஹெல்மெட் அணிய வேண்டும் என்றும் கையில் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும் என்றும் போக்குவரத்து விதிகளை மாணவ மாணவிகள் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# பாலவேடு அருள்மிகு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேக விழா



திருவள்ளூர் ,செப்.20–

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி ஐஏஎஃப் (IAF), பாலவேடு, சாஸ்திரிநகரில்எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால பெருமாள் ஆலய ஜீர்ணோத்தாரண புணரஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஸ்ரீ ராதா ருக்மணி சமேத ஸ்ரீ வேணுகோபால சுவாமி மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து, மூலவர் மகா கும்பாபிஷேகமும் அதனைத்தொடர்ந்துமகா அபிஷேகம், திருமஞ்சனம் மகா தீபஆராதனை மற்றும் தீர்த்த பிரசாதம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவுக்கான அனைத்துஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகி செல்வம் தலைமையில் விழா குழுவினருடன் இணைந்து ஆலய நிர்வாகிகள் மற்றும் பாலவேடு, சாஸ்திரிநகர் கிராம பொதுமக்கள் சிறப்பாகசெய்திருந்தனர்.

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் மாணவர்களுக்கு தீயணைப்பு தொடர்பான விழிப்புணர்வு



அரியலூர்,செப்.20–

அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் மாணவர்களுக்கு தீயணைப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இது தொடர்பாக வள்ளலார் கல்வி நிலையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

அரியலூர் அருகே உள்ள லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம், அரசு உதவி பெறும் கே .ஆர் .வி நடுநிலைப்பள்ளியில், கலைஞர் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தீ பாதுகாப்பு மற்றும் வெள்ள அபாய முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு நிகழ்வுக்கு, அரியலூர் மாவட்ட தீயணைப்புமீட்புபணிகள் நிலைய அலுவலர் கோ. செந்தில்குமார் தலைமை தாங்கினார், செயலாளர் கொ.வி. புகழேந்தி வரவேற்புரை நல்கினார்.

தீயணைக்கும் வழிமுறைகள் பற்றி முன்னணி தீயணைப்பாளர் மனோகரன், மாணவ, மாணவிகளுக்கு செயல் விளக்கம் செய்து காட்டினார். மழைக்காலங்களில் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறைகள், வெள்ள அபாய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், மக்கள் பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து தீயணைப்பாளர் ராஜா விளக்கிப் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் தீயணைப்பாளர்கள் கவியரசன், சரத்பாபு ஆகியோர் கலந்து கொண்டனர், முடிவில் பள்ளியின் தலைமை ஆசிரியர் சௌந்தர்ராஜன் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் ஆசிரியர்கள், மாணவர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.



▶ மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி வட்டம் பொறையார் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், உள்ளனர்.



▶ புதுவை அரசால் அறிவிக்கப்பட்டு பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா சைக்கிள்கல் வழங்குவதன் ஒரு நிகழ்வாக காரைக்கால் மாவட்டத்தில் நேற்று தெற்கு தொகுதிக்கு உட்பட்ட முருகாத்தாளாட்சி அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில் பயிலும் 50 மாணவிகளுக்கும் மற்றும் கோவிந்தசாமி பிள்ளை அரசு உயர்நிலைப்பள்ளியில் பயிலும் 40 மாணவர்களுக்கும் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜீம் தலைமையில் பள்ளி முதல்வர்கள் முன்னிலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் சைக்கிள்கள் வழங்கி பேசிய சட்டமன்ற உறுப்பினர் மாணவர்கள் அனைவரும் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் காரைக்கால் மாவட்டத்தில் இந்தாண்டு தேர்ச்சி விகிதம் அதிகமாகி உங்கள் பள்ளிகளுக்கும் மேலும் உங்கள் பெற்றோர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

# அயப்பாக்கம் அருள்மிகு ஸ்ரீ தர்மசாஸ்தா ஆலய மகா கும்பாபிஷேக விழா



சென்னை, செப்.20-
சென்னை, அம்பத்தூரை அடுத்த அயப்பாக்கம், மசூதி தெருவில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் அருள்மிகுஸ்ரீதர்மசாஸ்தா ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

விமான கோபுர கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து, மூலவர் மகா கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபஆராதனை மற்றும் பிரசாதம்வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்து சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அயப்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் செயல் அலுவலர் அ.ம.துரைவீரமணி தலைமையில் சபரீஸ்வரன்,ராம் மற்றும் ஸ்ரீஐயப்பசாமி பக்தர்கள் அறக்கட்டளை அகில பாரத ஐயப்பா சேவா சங்கத்தினருடன்இணைந்து ஆலய நிர்வாகிகள் மற்றும் திருக்கோயில் விழாக்குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

### பெரம்பூர், சங்கரன்பந்தல், காட்டுச்சேரி பகுதியில்

# 16 விநாயகர் சிலைகள் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் தரங்கம்பாடி கடலில் கரைக்கப்பட்டது



தரங்கம்பாடி, செப்- 20:
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா பெரம்பூர், சங்கரன்பந்தல், உத்திரங்குடி, இலுப்பூர், திருக்களாச்சேரி, ஆயப்பாடி, காட்டுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது பதற்றமான பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளது. இதனை அடுத்து விநாயகர் சதுர்த்தின் பொழுது வைக்கப்பட்டிருந்த 16 விநாயகர் சிலைகள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு தரங்கம்பாடி கடலில் கரைக்கப்பட்டது.

மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மீனா தலைமையில் 200-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். பெரம்பூர் முதல் பொறையார் வரை வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலைகள் அடுத்தடுத்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு தரங்கம்பாடி கடலில் கரைக்கப்பட்டது.

# பொறையார் டி.பி.எம்.எல். கல்லூரியில் மகளிர் குழுவின் உற்பத்தி பொருட்களை கல்லூரி சந்தை நிகழ்ச்சி



தரங்கம்பாடி, செப்- 20:
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, பொறையார் டி.பி.எம்.எல். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மகளிர் திட்டம் சார்பில் மகளிர் குழுவின் உற்பத்தி பொருட்களை கொண்ட கல்லூரி சந்தை நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி தொடங்கி வைத்து, உற்பத்தி பொருட்களின் விற்பனையாளர்களை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசானது, மகளிர் குழுவின் உற்பத்தி பொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடையவே இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் மூலம் மகளிர் உற்பத்தி பொருட்கள் குறித்து அனைவரும் அறிந்து கொள்ளலாம். இந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த துறை சார்ந்த அலுவலர்களுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரி சந்தை நிகழ்ச்சியில், மகளிர் குழு உற்பத்தி பொருட்களின் விற்பனையாளர்கள் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்குகளில், அமைக்கபட்டுள்ள உற்பத்தி பொருட்கள் மிகவும் சிறப்பாக உள்ளது. இதுபோன்று தொடர்;ந்து, மகளிர் திட்டம் மூலம் உற்பத்தி பொருட்களின் கல்லூரி சந்தை நிகழ்ச்சியினை நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்படும்என மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வட்டாட்சியர் தரங்கம்பாடி சரவணன் பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, மகளிர் உதவி திட்ட அலுவலர் மனுநீதி சோழன், கல்லூரி முதல்வர் முனைவர் ஜான்சன் ஜெயக்குமார், தரங்கம்பாடி பேரூராட்சி செயல்அலுவளர் பூபதி கமலகண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே சத்துணவு கூடம் மேற்கூரை இடிந்து விழுந்தது, உயிர்தப்பிய 16 மாணவர்கள்





சீர்காழி, செப்,20
மயிலாடுதுறை மாவட்டம்சீர்காழி அருகே துறையூர் கிராமத்தில் 21 -வதுவார்டில்செயல்பட்டு வரும் நகராட்சி தொடக்கப் பள்ளியில் 16 மாணவர்கள் மற்றும் இரண்டு ஆசிரியர்கள் பணியில் உள்ளனர்.

கடந்த மூன்று நாட்கள் விடுமுறைக்கு பின் நேற்று வழக்கம் போல பள்ளி திறந்து மாணவர்கள் வந்துள்ளனர். இந்நிலையில் மதிய உணவு சமைக்க ஆயத்தம் ஆனபோது சத்துணவு கூடம் கட்டிடத்தின் மேற்கூரை கான்கிரட் காரை இடிந்து விழுந்து.

1976 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த கட்டடம், கடந்த 47 வருடமாக செயல்பட்டு வருகிறது. பல வருடமாக சிதிலமடைந்து இருந்த நிலையில் புது கட்டிடம் கட்டி தர பலமுறை நகராட்சி கூட்டத்தில் கிராமமக்கள் புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் காட்டி வருவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

தற்போது திடிரென கட்டட மேற்கூரை இடிந்து விழுந்தது ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பைற்றோரிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த பகுதியில் மாணவர்கள் இல்லாததால் 16 மாணவர்கள் உயிர் தப்பினர். மேலும் பள்ளியில் கழிவறை, குடிநீர் வசதி இல்லாமல் மாணவர்கள் இயற்கை உபாதைகழிக்கமுடியாமல் தவித்து வருகின்றனர்.

உடனடியாக மாணவர்களின் நலனில் அக்கரை கொண்டு தமிழ்நாடு முதல்வர் நடவடிக்கை எடுக்க பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சீர்காழி அருகே ஓய்வு பெற்ற தனியார் நிறுவன அதிகாரி வீட்டில்

# 7 சவரன் தங்க நகை மற்றும் 55 ஆயிரம் ரொக்கம் திருட்டு



சீர்காழி, செப்,20
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சட்டநாதபுரம் கம்பன் நகரில் வசித்து வருபவர் சோமசுந்தரம். டால்மியா சிமெண்ட் நிறுவனத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவரான இவர் 13ஆம் தேதி சென்னையில் வசிக்கும் மகன் வீட்டிற்கு குடும்பத்துடன் சென்றுள்ளார்.

கடந்த ஒருவார காலமாக வீடு பூட்டி இருந்ததை நோட்டமிட்ட மர்ம நபர்கள் அவரது வீட்டின் பூட்டை உடைத்து பீரோவில் இருந்த ஏழு சவரன் தங்க நகை மற்றும் 55 ஆயிரம் ரொக்க பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

வீடு திரும்பிய சோமசுந்தரம் வீட்டின் உள்புற கதவுகள் உடைந்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். உள்ளே சென்று பார்த்த போது தான் வீட்டில் இருந்த நகை, பணம் கொள்ளை போனது தெரியவந்தது.

இதையடுத்து சீர்காழி காவல் நிலையத்தில் சோமசுந்தரம் அளித்த புகாரின் பேரில் சீர்காழி காவல்துறையினர் கைரேகை நிபுணர் உதவியுடன் சோதனை மேற்கொண்டு கொள்ளையடித்த மர்ம நபர் குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

# விஜய் ஆண்டனியின் மகள் மீரா எழுதிய தற்கொலை கடிதம் சிக்கியுள்ளதாக தகவல்

## போலீசார் விசாரணை



சென்னை, செப்.20-
இசையமைப்பாளரும், நடிகருமான விஜய் ஆண்டனியின் மகள் மீரா நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டில் உள்ள தனது அறையில் மின் விசிறியில் மீரா தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டார். இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

முதற்கட்ட விசாரணையில் மீரா மிகுந்தமன அழுத்தத்தில் இருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை தொடர்ந்து, மீராவின் உடல் ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் பிரேத பிரிசோதனை செய்யப்பட்டு, பின்னர் டிடிகேசாலையில் உள்ள விஜய் ஆண்டனியின் இல்லத்தில் பொதுமக்கள் மற்றும் திரையுலகினர் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

விஜய் ஆண்டனியின் மகள் மறைவுக்கு நடிகர்கள், திரயுலகினர் அஞ்சலி தெரிவித்து வருகின்றனர். நடிகர்கள் சிம்பு, பரத், கார்த்தி, நிழல்கள் ரவி, சதிஷ், பார்த்திபன், சத்யராஜ், லிவிங்ஸ்டன், மிஸ்கின் உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மீராவின் உடல் இன்று கீழ்ப்பாக்கத்தில் அடக்கம் செய்யப்படுகிறது. இந்த நிலையில், விஜய் ஆண்டனியின் மகள் மீரா எழுதிய தற்கொலை கடிதம் சிக்கியுள்ளதாக போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். அதில் "Love you all... Miss you all என தொடங்கி 10 வரிகளில் ஆங்கிலத்தில் எழுதிய கடிதம் சிக்கியுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர், எனது நண்பர்களையும், ஆசிரியர்களையும் நான் மிஸ் செய்வேன். நான் இல்லாமல் எனது குடும்பம் தவிக்கும். நானும் எனது குடும்பம் இல்லாமல் தவித்து போவேன்." என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடிதத்தை போலீசார் கைப்பற்றி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### காவிரி நீரை பெற்றுத்தராத ஒன்றிய அரசை கண்டித்து

# சீர்காழியில் விவசாயிகள் ரயில் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம்




சீர்காழி, செப்.20-
தமிழகத்துக்கு வழங்க வேண்டிய காவிரி நீரை கர்நாடக அரசு வழங்காமல் இருந்து வருகிறது. இது தொடர்பாக பல்வேறு கட்சியினரும் விவசாயிகள் சங்கத்தினரும் கடும் கண்டனத்தை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த சூழலில் காவிரி நீரை பெற்று தராத ஒன்றிய அரசை கண்டித்து தமிழக அனைத்து விவசாயிகள் சங்கத்தின் மயிலாடுதுறை மாவட்ட தலைவர் வைத்தியநாதன் தலைமையில் சீர்காழியில் ரயில் நிலையம் முன்பு நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோரிக்கைகள்; தமிழ்நாட்டில் கருகும் மூன்றரை லட்சம் ஏக்கர் குறுவை பயிரையும், 15 லட்சம் ஏக்கர் சம்பா சாகுபடி துவங்கிட உரிய தண்ணீரை கர்நாடகவிடமிருந்து, காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டதன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கவேண்டிம், மேகதாது அணைக்கட்டு அனுமதிக்க கூடாது, தமிழ்நாட்டில் ராசிமணலில் அணைக்கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும், காவிரி மேலாண்மை ஆணையத்தை தன்னாட்சி அதிகாரத்துடனான செயல்பாட்டை முடக்காதே, காவிரி டெல்டா விவசாயத்தை அழிக்காதே உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

# கோவூர் அருள்மிகு ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ சீனிவாச பெருமாள் மற்றும் பக்த ஆஞ்சநேயர் கருடாழ்வார் ஆலய குடமுழுக்கு நன்னீராட்டு விழா



காஞ்சிபுரம், செப்.20-
காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் வட்டம், சென்னை, போரூர் அடுத்த கோவூரில் கோவில் கொண்டு, வேண்டியவருக்கு வேண்டிய அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ சீனிவாச பெருமாள் மற்றும் பக்த ஆஞ்சநேயர் கருடாழ்வார் ஆலய குடமுழுக்கு நன்னீராட்டு விழா ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்றது.

கும்பாபிஷேக விழாவினைத் தொடர்ந்து மகா அபிஷேகம், மகா தீபாராதனையும் அதனை அடுத்து பகல் 12.00 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. மாலை 6.00 மணியளவில் திருக்கல்யாண வைபவமும் சிறப்பாக நடைபெற்றது.

கோவூர் ஊராட்சி மன்றத் தலைவர் பா.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந்த கும்பாபிஷேக விழாவில், திமுக-வின் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மற்றும் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தரங்கம்பாடி தாலுகா அரசு அலுவலகங்கள் மற்றும் மருத்துவமனைகளை மாவட்ட ஆட்சியர் திடீர் ஆய்வு



தரங்கம்பாடி, செப்- 20:
மயிலாடுதுறை மாவட்டம்,தரங்கம்பாடி தாலுகா, செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட ஆறுபாதி, பரசலூர் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செம்பனார்கோவில் வட்டாரத்திற்குட்பட்ட ஆறுபாதி; ஊராட்சியில் விளநகர் உட்கிராம பகுதியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் ராஜேந்திரன் வாய்க்கால் மற்றும் கிளை வாய்க்கால்கள் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரப்பட்டு வருவதையும், பணியின் தரத்தினை ஆய்வு செய்தார்.

மேலும், இதுவரை இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள பணிகளின் விவரங்களையும் மாவட்ட ஆட்சியர் கேட்டறிந்தார். தொடர்ந்து, ஆறுபாதி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் ஈமகிரி மண்டபம் கட்டப்பட்டு வருவதையும், பரசலூர் ஊராட்சியில் கல்யாணசுந்தரம் நகரில் ரூ.4 இலட்சத்து 59 ஆயிரம் மதிப்பீட்டில்61மீநீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கப் பட்டுள்ளதையும்,பரசலூர் ஊராட்சியில் நக்கீரன் தெருவில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 21 இலட்சத்து 44 ஆயிரம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதையும், மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, பொறையார் அரசு மருத்துவமனையில் ஆய்வகம், ஆண்கள் மருத்துவ பிரிவு, இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் பரிசோதனை மையம், மருந்தகம், காய்ச்சல் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, நுண்கதிர் பிரிவு, மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வரும் தினசரி சிகிச்சை பெறும் புற நோயாளிகள் பதிவேடு, வருகை பதிவேடு, மருந்துகள் இருப்பு பதிவேடு உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின்போது, தரங்கம்பாடி வட்டாட்சியர் சரவணன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுண சங்கரி, வட்டார வளர்ச்சி அலுவலர் மீனா, தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் பூபதி கமலக்கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# பெரியபாளையம் வந்த திருக்குடைகள் பாதயாத்திரை குழுவினர்களுக்கு 19-ம் ஆண்டாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது





ஊத்துக்கோட்டை, செப்20-
ஆந்திர மாநிலம், திருப்பதி-திருமலையில் உள்ள வெங்கடாஜலபதிக்கு ஆண்டுதோறும் புரட்டாசி மாதம் பிரம்மோற்ச விழா மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், தமிழகத்தின் சார்பில் சென்னையில் இருந்து திருப்பதி-திருமலைக்கு திருக்குடைகள் பாதயாத்திரையாக கொண்டு சென்று சமர்ப்பிக்கும் நிகழ்ச்சி தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், சென்னையில் இருந்து புறப்பட்ட இந்ததிருக்குடைகள் மற்றும் பாதுகைகள் திருநின்றவூர் வந்தடைந்தது. வி.பி.ராமகிருஷ்ணா திருமண மண்டபத்தில் திங்கட்கிழமையான நேற்று முன் தினம் காலை திருகுடைகள் விழா குழுவினர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஸ்ரீமத் ராமானுஜ கைங்கர்ய டிரஸ்ட் நிர்வாகிகள் 19-ம் ஆண்டாக திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் வழியாக ஊத்துக்கோட்டைக்கு இந்த திருக்குடைகளையும், பாதுகைகளையும் கொண்டு வந்தனர்.

பெரியபாளையம் பஸ் நிலையம் அருகே நேற்று காலை இந்த திருக்குடைகள், பாதுகைகள் வந்தது. அப்போது பெரியபாளையம் ஸ்வீட் ராஜா குடும்பத்தினர் மற்றும் கிராம மக்கள்,பொதுமக்கள், பக்தர்கள் இந்த திருக்குடைகள், பாதுகைகளுக்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.இதன் பின்னர், இங்கு அமைக்கப்பட்டு இருந்த பந்தலில் வைத்து பாதுகைகளுக்கு சிறப்பு பூஜைகள் செய்தனர்.

இதன் பின்னர், இப்பகுதியைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஒருவர் பின், ஒருவராக வந்து இந்தப் பாதுகையை வணங்கி சென்றனர். இதன் பின்னர், அனைத்து பக்தர்களுக்கும் ஸ்வீட் ராஜா குடும்பத்தினர் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டது. இதைத்தொடர்ந்து திருக்குடைகளும், பாதுகைகளும் போலீஸ் பாதுகாப்புடன் ஊத்துக்கோட்டை நோக்கி சென்றது. இந்தத் திருக்குடைகள் வெள்ளிக்கிழமை காலை திருமலையில் உள்ள ஸ்ரீ மலையப்ப சுவாமி கோவிலில் சமர்ப்பிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. அன்று இரவு கருட சேவை நிகழ்ச்சி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்வியில் இடைநிற்றலை தவிர்க்கும் வகையில் நிதி உதவி



திருமயம் , செப்.20-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் இயங்கி வரும் பாரத மிகு மின் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் ஒன்றிணைந்து செயல்படுத்தி வரும் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக புதுக்கோட்டை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியர்கள் பொருளாதாரம் இல்லை என்ற காரணத்துக்காக கல்வியில் இடைநிற்றலை தவிர்கவும், மாணவ, மாணவியர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் விதமாக அவர்களை கண்டறிந்து அவர்களுக்கு தேவையான கல்வி உதவிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை பாரத மிகு மின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக அறக்கட்டளையின் கல்வி குழு மூலமாக பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய மாணவ மாணவிகளுக்கு ரூபாய் 60 ஆயிரம் மதிப்பிலான பல்வேறு விதமான கல்வி சேவைகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது .கல்வி உதவிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி முதுநிலை வருவாய் ஆய்வாளர் செந்தில்குமார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சமூக ஆர்வலர் பாண்டியராஜன் ,சரவணன், ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியினை முத்துராமன், சசி கண்ணன், வேங்கையன், செந்தில்குமார், ரமேஷ், ராபர்ட் எடிசன் நாகசுந்தரம் ஆகியோர் கொண்டு சிறப்பித்தனர். பிரகாஷ் நன்றி கூறினார்.

# நியோ மேக்ஸ் மோசடி கைதான முக்கிய நிர்வாகிகளை காவலில் விசாரிக்க நடவடிக்கை





மதுரை , செப்.20-

நியோ - மேக்ஸ் மோசடியில் கைதான முக்கிய நிர்வாகிகளை போலீஸ் காவலில் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

'நியோ-மேக்ஸ்' என்ற ரியல் எஸ்டேட் என்ற நிறுவனம் மதுரை உட்பட பல்வேறு இடங்களில் கிளைகளை ஏற்படுத்தி கூடுதல் வட்டி தருவதாக ஏராளமான முதலீடுகளை ஈர்த்தன. இதன்மூலம் பல கோடி ரூபாயை வசூலித்து, பிளாட், மருத்துவமனை, கல்லூரிகளை வாங்கி முறை கேடு செய்ததாக புகார்கள் எழுந்தன. இந்நிலையில், பாதிக்கப்பட்டோர் கொடுத்த புகார்களின் பேரில், மதுரை பொருளாதார குற்றத் தடுப்பு போலீஸார் 'நியோ மேக்ஸ்' மற்றும் அதன் துணை நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள் மதுரை விராட்டிபத்து கமலக் கண்ணன் பாலசுப்பிரமணியன், திருச்சி வீரசக்தி உள்ளிட்ட முகவர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்தனர். காவல் கண்காணிப்பாளர் ஜோஸ் தங்கையா மேற்பார்வையில் டிஎஸ்பி மணிஷா தலைமையிலான சிறப்பு போலீஸ் குழுவினர் விசாரிக்கின்றனர்.

இவ்வழக்கில் தேவகோட்டை சைமன் ராஜா, மதுரை கபில், தூத்துக்குடி இசக்கி முத்து, சகாயராஜ் , மதுரை பைபாஸ் ரோடு எல்ஐசி அதிகாரி பத்மநாபன், விருதுநகர் மீனாட்சிபுரம் மாரிச்சாமி, சிவகங்கை மாவட்டம், குமாரபட்டி மலைச்சாமி உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து தலைமறைவாக இருந்த கமலக்கண்ணன், பாலசுப்பிரமணி, வீரசக்தி உள்ளிட் டோரை டிஎஸ்பி மணிஷா தலைமையிலான தனிப்படையினர் தேடிய நிலையில், சென்னை சேப்பாக்கத்தில் வைத்து , கமலக்கண்ணன்(55), இயக்குநர்களில் ஒருவரான மதுரை விராட்டிபத்து சிங்காரவேலன் (56) ஆகியோர் 2 நாளுக்கு முன்பு கைது செய்யப்பட்டனர். அவர்கள் மதுரை பொருளாதார குற்ற வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் (டான்பிட்) ஆஜர்படுத்தினர். இருப்பினும், இருவரையும் போலீஸ் காவலில் விசாரிக்க திட்டமிட்டுள்ளனர்.

போலீஸார் கூறுகையில், ''இது வரையிலும் 552 முதலீட்டார்களிடம் வசூலித்த சுமார் ரூ. 105 கோடி ஏமாற்றப்பட்ட தொகையாக புகார்தார்கள் வந்துள்ளன. வழக்கு விசாரணையிலுள்ள போதிலும், நியோ- மேக்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முழுவதும் சொத்துக்கள் விவரம், மொத்த முதலீட்டாளர்கள் எண்ணிக்கை, வங்கிக் கணக்குகள் மற்றும் பிற குற்றவாளிகள் குறித்து அறிய கமலக்கண்ணன், சிங்காரவேலனை போலீஸ் காவலில் விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என்றனர்.

# புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை வளாகத்தில் உதடு / உள் அண்ணம் பிளவுபட்டோருக்கான இலவச மருத்துவ முகாம்



புதுக்கோட்டை, செப்.20-

புதுக்கோட்டை டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, மீனாட்சி மருத்துவமனை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மிட்டவுன் ரோட்டரி சங்கம் இணைந்து நடத்திய உதடு/உள் அண்ணம் பிளவுபட்டோருக்கான இலவச மருத்துவ முகாமானது டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

முகாமிற்கு டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் மற்றும் சர்க்கரை நோய் சிறப்பு மருத்துவர் சலீம் வழிகாட்டுதலின்படி, மிட்டவுன் ரோட்டரி சங்கத் தலைவர் ஆரோக்கிய ஜெஸ்டின் தலைமை தாங்கினார்,சிறப்பு விருந்தினர்களாக முக அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் சௌமியா திரிபாதி மற்றும் டாக்டர் பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். உதடு/ உள் அண்ணப் பிளவு என்பது நோய் அல்ல முற்றிலும் குணப்படுத்தக் கூடியது, ஆரம்ப நிலையில் இதனை கண்டுபிடித்து முறையான அறுவை சிகிச்சை செய்யும் பொழுது மற்றவர்களைப்போல் இயல்பான முகத்தைப் பெற வாய்ப்புள்ளது என்று கூறினார். மேலும் தி ஸ்மைல் டிரெய்ன் உதடு/உள் அண்ணப்பிளவு சீரமைப்பு மண்டல மையம் மூலமாக 14000-க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகள் முற்றிலும் இலவசமாக சிறந்த முறையில் செய்யப்பட்டது என எடுத்துக் கூறினார். உடன் ரோட்டரி சங்கத்தின் துணை ஆளுநர் ஜெயக்குமார், மிட்டவுன் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் ஜான்ஹென்ரி, அஜீஸ், கிருஷ்ணமூர்த்தி மற்றும் ரோட்டரி கிரவுன்சிட்டி தலைவர் செந்தில்குமார் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

இம்முகாமில் உதடு அண்ணம் பிளவு பட்ட குழந்தைகள் மற்றும் ஏற்கனவே அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் மறு ஆய்வு செய்து கொண்டு பயன் பெற்றனர், முகாம் ஏற்பாடுகளை டீம் மருத்துவமனையின் பொது மேலாளர்,ஜோசப் செய்திருந்தார், முடிவில் திட்ட இயக்குநர் ராஜா இம்முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.



▶ நாமக்கலில் ஹோட்டல் ஒன்றில் உணவு சாப்பிட்ட மாணவி உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து புதுக்கோட்டையில் உள்ள சவர்மா கடைகளில் உணவு பாதுகாப்பு துறையினர் நேற்று திடீரென இபி அலுவலகம், டிவிஎஸ் கார்னர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கடைகளில் கெட்டுப் போன சிக்கனை எடுத்து குப்பைத் தொட்டில் போட்டு பினாயில் ஊற்றி அழித்தனர்.



▶ மதுரை தனியார் ஹோட்டலில் ராம்ராஜ் காட்டன் வேஷ்டிகள், பல வண்ணச் சட்டைகள், பட்டு வேஷ்டிகள், உள்ளாடைகள், துண்டுகள் உட்பட கண்ணைக் கவரும் ஆயிரக்கணக்கான டிசைன்களில் கண்காட்சிகள் நடைபெறுகிறது, இந்த கண்காட்சியில் ரூபாய் ஒரு லட்சத்திற்கு திருமணப்பட்டு வேஷ்டிகள் அறிமுகம் செய்யப்படுகிறது. இதைக் குறித்து ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் தலைவரும், சிந்தனையாளருமான கே.ஆர். நாகராஜன் கூறுகையில் பட்டாடைகள் அணிவதால் கிடைக்கும் நன்மைகளும், அவை எப்படி நம் உடலையும், மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கிறது என்பதை தெரிவித்தார். விழாவில் முக்கிய நிகழ்வாக மதுரை ராஜ்மஹால் சில்க்ஸ் ரெடிமேட்ஸ் உரிமையாளர் முருகானந்த் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பிலான பட்டு வேஷ்டியை அறிமுகம் செய்து வைத்தார். விழாவில் ராஜ்மஹால் காட்டன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அருண் ஈஸ்வர் மற்றும் இணை இயக்குனர் அஸ்வின் உடன் இருந்தனர்.

### அரியலூரில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட

# உதவி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



அரியலூர், செப்.20-

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள, கலைஞர் மகளிர் உரிமை திட்ட உதவி மையத்தினை, மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் அரியலூர் மாவட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சரால் 15.09.2023 அன்று துவக்கி வைக்கப்பட்டு, தகுதியான பயனாளிகள் அனைவரது வங்கி கணக்கிலும் நேரடியாக ரூ.1000 வரவு வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகள் தொடர்பான விவரங்களை பொதுமக்கள் கோரும் போது அவர்களுக்கு தேவையான தகவல்களை தெரிவிக்கும் வகையில், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலங்கள், மற்றும் அனைத்துவட்டாட்சியர் அலுவலங்களிலும், உதவி மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.

அந்த வகையில் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கலைஞர் மகளிர் உரிமை திட்ட உதவி மையத்தினை இன்றையதினம் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டுள்ள கோரிக்கைகளின் விவரம் குறித்து கேட்டறிந்து, பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கோரும் தகவல்களை வழங்கிட வேண்டும் எனவும், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு மேல்முறையீடு செய்யக் கோரும்விண்ணப்பதாரர்களை, அவர்களது விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக குறுஞ்செய்தி வரப்பெற்ற 30 நாட்களுக்குள், அருகில் உள்ள இ-சேவை மையத்தில் கட்டணமின்றி சம்மந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியருக்கு மேல்முறையீடு செய்திட தெரிவிக்க வேண்டும் எனவும், சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனிமேரி ஸ்வர்ணா அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) இளங்கோவன், மாவட்ட ஆட்சியரக மேலாளர்(பொது) குமரையா, வட்டாட்சியர் (பேரிடர் மேலாண்மை) சந்திரசேகர் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வடபழனி, குமரன் காலனி பிரதான சாலைக்கு "மாண்டலின் ஸ்ரீநிவாஸ் முதன்மைச் சாலை" என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்காக மாண்டலின் ஸ்ரீநிவாஸ் தந்தை சத்தியநாராயணா, தாயார் காந்தம், சகோதரர் மாண்டலின் ராஜேஷ், அவரது மனைவி ஹர்ஷா ராஜேஷ் ஆகியோர் சந்தித்து, நன்றி தெரிவித்துக் கொண்டனர். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

### திருச்சி புறநகர் மாவட்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனம்

# இரண்டவது மாநாட்டில் விலைவாசியை கட்டுப்படுத்த வலியுறுத்தி தீர்மனம்



திருச்சி, செப்.20-

திருச்சி புறநகர் மாவட்டம் திருவெறும்பூர் தாலுகாவில் உள்ள ஏஐடியூசி தொழிற்சங்க அலுவலகத்தில் திருச்சி புறநகர் மாவட்ட இந்திய மாதர் தேசிய சம்மேளனம் இரண்டவது மாநாடு நடைபெற்றது, இம்மாநாட்டுக்குஇ.கவிதா, பி.மாரியம்மாள்,செலின் லீமாரோஸ் ஆகியோர் தலைமை வகித்தனர், மாநாட்டு கொடியை மூத்த தோழர் ஜெ.ரஹ்மத்துன்னிஷா ஏற்றி வைத்தார், மாவட்ட செயலாளர் எஸ்.ஜெயக்குமாரி வேலை அறிக்கையை சமர்ப்பித்தார்,வேலை அறிக்கை விவததிற்கு பின் ஏகமனதாக ஏற்க்கப்பட்டது

புதிய மாவட்டக்குழு உறுப்பினர்களாக 15 பேர் தேர்வு செய்யப்பட்டனர் இதில் கௌரவத் தலைவர்களாக எஸ். ஜெயக்குமாரி , ஜெ.ரஹ்மத்துன்னிஷா புதிய மாவட்டத் தலைவராக இ.கவிதா, துணைத் தலைவர்களாக ஜெ.வைசூர்யா கே.இளையராணி மாவட்டச்செயலாளராக பி.மாரியம்மாள் துணைச் செயலாளர்களாக எஸ். ரம்யா வி.பிரேமாவதி பொருளாளராக செலின் லீமாரோஸி மாவட்டக்குழு உறுப்பினர்களாக. வீரம்மாள் தேவகி,சுமதி, அகிலாண்டேஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் .

சம்மேளனத்தின் மாநிலத் தலைவரும், முன்னாள்சட்டப்பேரவை உறுப்பினருமான .பி. பத்மாவதி மாநிலதுணைத் தலைவர் நிஷாசத்யன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் செ.ராஜ்குமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளை வாழ்தி உரை வழங்கினர், பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை உடனே அமல்படுத்த வேண்டும்,விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டும், ஒன்றிய பாஜக அரசை அப்புறப்படுத்த போராட்டத்தை தீவிரப் படுத்த வேண்டும்.

கிராமப்புறங்களில் புதிய பெண் தொழில் முனைவோர்களை உருவாக்கும் விதத்தில் பெண்களுக்கான தொழில் பூங்காக்கள் திருச்சி மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் அமைக்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

# சவர்மா சாப்பிட்டு பள்ளி மாணவி உயிரிழந்த சம்பவம் நாமக்கல் இறைச்சிக் கடை உரிமையாளர் கைது



நாமக்கல் , செப்.20-

சவர்மா சாப்பிட்டு பள்ளி மாணவி உயிரிழந்த விவகாரத்தில் தனியார் ஹோட்டலுக்கு கோழி இறைச்சி சப்ளை செய்த இறைச்சிக் கடை உரிமையாளரை காவல் துறையினர் கைது செய்தனர்.

நாமக்கல் பழைய நகராட்சி அலுவலகம் அருகே உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் சவர்மா எனப்படும் கோழி இறைச்சி சாப்பிட்ட பள்ளி மாணவி கலையரசி (14) என்பவர் திங்கள்கிழமை உயிரிழந்தார். மேலும், அவரது குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் அதே ஹோட்டலில் சவர்மா சாப்பிட்ட 11 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் உள்பட 43 பேர் அரசு, தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்தச் சம்பவத்தையடுத்து தனியார் ஹோட்டலுக்கு மாவட்ட ஆட்சியர் ச.உமா உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டது. மேலும், ஹோட்டல் உரிமையாளர் நவீன் குமார், சமையலர்கள் இருவர் என மொத்தம் 3 பேர் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டனர். தவிர, மாவட்டம் முழுவதும் சவர்மா, கிரில் சிக்கன் விற்பனை செய்யவும் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மாவட்ட ஆட்சியர் உத்திரவின் பேரில் நாமக்கல் மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர் டாக்டர் அருண் தலைமையில் 10 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. உணவுப் பாதுகாப்பு அலுவலர், அந்தந்த உள்ளாட்சி அமைப்பில் உள்ள சுகாதார அலுவலர்கள் அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் மாவட்டம் முழுவதும் உள்ள ஹோட்டல்கள், ஃபாஸ்ட் புட் உணவகங்கள், மீன் இறைச்சிக் கடைகள், கறிக்கோழிக்கடைகள் உள்ளிட்ட கடைகளை சோதனையிட்டனர். மொத்தம் 210 உணவங்களில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 10 கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவு விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது.

திருச்செங்கோட்டில் உள்ள பிரியாணி விற்பனை செய்யும் கடைகளில் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

அந்த உணவங்களுக்கு மாவட்ட சுகாதார அலுவலர் அருண் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதனிடையே மாணவி உயிரிழந்த விவகாரத்தில் தனியார் ஹோட்டலுக்கு கோழி இறைச்சி விற்பனை செய்த நாமக்கல் ராமாபுரம்புதூரைச் சேர்ந்த கோழி இறைச்சிக் கடை உரிமையாளர் சீனிவாசன் என்பவரை காவல் துறையினர் கைது செய்தனர். சுகாதாரமற்ற முறையில் இறைச்சி விற்பனை செய்ததாக உணவு பாதுகாப்புத் துறையினர் அளித்த புகாரின் பேரில் அவரை கைது செய்ததாக காவல் துறையினர் தெரிவித்தனர்.

# ஏம்பல் பேருந்து நிலையம் மற்றும் பள்ளிக்கு அருகில் உள்ள டாஸ்மாக் கடையை அகற்ற அதிகாரிகள் ஒப்புதல்



ஆவுடையார்கோவில், செப்.20-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா ஏம்பல்பேருந்து நிலையம்,பள்ளிக்கூடம், கோயில் மற்றும் ரேஷன் கடை அருகில் அரசு மதுபான கடை 15 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இதனால் அப்பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களுக்கும், பள்ளி வந்து செல்கின்ற மாணவ மாணவிகளுக்கும் தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் இருந்து வந்த நிலையில் டாஸ்மாக் கடையைஅகற்ற வேண்டும் என்று ஏம்பலில் வாழுகின்ற அப்பகுதி மக்கள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் தொடர் போராட்டம் நடத்தி டாஸ்மாக் கடையை அப்புறப்படுத்த வேண்டும் என்று இதுவரை கூறிவந்த நிலையில் டாஸ்மாக் கடையை அப்புறப்படுத்தவில்லை.

எனவே விடுதலை சிறுத்தை கட்சியினர் டாஸ்மாக் கடைக்கு பூட்டு போடும் போராட்டத்தை அறிவித்துள்ள நிலையில் உடனடியாக ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மார்ட்டின் லூதர் கிங் தலைமையில் சமாதான கூட்டம் நேற்று ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு டாஸ்மாக் உதவி மேலாளர் கருப்பையா, அறந்தாங்கி கோட்டைகளால் அலுவலர் வில்லியம்ஸ் மோசஸ், ஏம்பல் காவல்துறை உதவி ஆய்வாளர் ராஜேந்திரன், உட்பட ஏம்பல் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும், விடுதலைச் சிறுத்தை கட்சியின் மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன், மீனவர் மேம்பாட்டு பேராயம் மாவட்ட செயலாளர் பீட்டர் வளவன்,அரிமளம் ஒன்றிய பொறுப்புச் செயலாளர்சுடர் மணி,மீனவர் சங்க மாநிலச் செயலாளர் தோழர் ஷாஜகான், உள்ளிட்டோர் சமாதான கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்கள்,இதில் 5 மதத்திற்குள் வேறு ஒரு இடத்திற்கு மதுக்கடையை அகற்ற அதிகாரிகள் ஒப்புக்கொண்டதால் மதுக்கடைக்கு பூட்டு போடும் போராட்டம் தற்சமயம் கைவிடப்பட்டது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

## ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர்

# சுந்தர், அஸ்வினுக்கு பதிலாக இவரை அணியில் எடுத்திருக்கலாம் ஹர்பஜன் சிங்



**மும்பை : செப். 20,**
**ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது.**

இந்திய கிரிக்கெட் அணி கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆசிய கோப்பை இறுதி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தி 8வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இதையடுத்து இந்திய அணி அடுத்ததாக ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆட உள்ளது.

இந்த தொடர் வரும் 22ம் தேதி தொடங்க உள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. முதல் இரு போட்டிகளுக்கு ஒரு அணியும், கடைசி போட்டிக்கு ஒரு அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிய கோப்பை தொடரில் காயம் அடைந்த அக்சர் படேல் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு ஆட்டங்களுக்கான இந்திய அணியில்இடம்பெறவில்லை. உலகக்கோப்பை தொடரை கருத்தில் கொண்டு 3வது ஆட்டத்திற்கான இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார்.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இரு ஆட்டத்துக்கான அணியில் இடம் பெறாத அக்சர் படேலுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர் மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகிய இரண்டு சுழற்பந்து வீச்சாளர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் அக்சர் படேலுக்கு பதிலாக வாஷிங்டன் சுந்தர் மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோரை அணியில் எடுத்ததற்கு பதிலாக யுஸ்வேந்திர சாஹலை சேர்த்து இருக்கலாம் என்று இந்திய அணியின் முன்னாள் வீரரான ஹர்பஜன் சிங் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஹர்பஜன் சிங் கூறும்போது, யுஸ்வேந்திர சாஹல் ஏற்கனவே ஒரு மேட்ச் வின்னர் என்பதை நிரூபித்துள்ளார். எந்த ஒரு வீரருக்கு பதிலாகவும் அவர் அணியில் தேர்வு செய்யப்பட தகுதியான ஒரு வீரர். என்னை பொறுத்தவரை அக்சர் படேலுக்கு பதிலாக அவரே இந்திய அணியில் தேர்வாகி இருக்க வேண்டும் என ஹர்பஜன் சிங் கூறினார். இந்திய அணிக்காக இதுவரை 72 ஒருநாள் போட்டியில் விளையாடியுள்ள சாஹல் 121 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# உலக கோப்பையை வெல்ல இந்தியா தயார் கபில் தேவ் உறுதி



**புதுடெல்லி : செப். 20,**
**சொந்த மண்ணில் நடைபெற உள்ள ஐசிசி உலக கோப்பை ஒருநாள் போட்டித் தொடரில் சாம்பியன் பட்டம் வெல்ல இந்திய அணி தயாராகிவிட்டதாக முன்னாள் கேப்டன் கபில் தேவ் கூறியுள்ளார்.**

கிரிக்கெட் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உலக கோப்பை தொடர் இந்தியாவில் அக்.5ம் தேதி தொடங்கி நவ.19 வரை நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்கதேசம், நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் களமிறங்க உள்ளன. இந்த தொடருக்கு முன்னோட்டமாக அமைந்த ஆசிய கோப்பை ஒருநாள் போட்டித் தொடரில், ரோகித் ஷர்மா தலைமையிலான இந்திய அணி 8வது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

இந்த நிலையில், உலக கோப்பையை வெல்ல இந்திய அணி தயாராகிவிட்டதாக முன்னாள் கேப்டன் கபில் தேவ் கூறியுள்ளார். கபில் தலைமையிலான இந்திய அணி 1983ல் முதல் முறையாக உலக கோப்பையை வென்று சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது.

ஜம்மு மற்றும் காஷ்மீர் ஓபன் கோல்ப் சாம்பியன்ஷிப் தொடரை நேற்று தொடங்கி வைத்த கபில், இந்திய அணிக்கான வாய்ப்பு குறித்து கூறியபோது, லீக் சுற்றின் முடிவில் முதல் 4 இடங்களுக்குள் வந்து அரையிறுதிக்கு முன்னேறுவது முக்கியம். அதன் பிறகு கோப்பையை வெல்வதில் அதிர்ஷ்டத்தின் பங்கும் நிச்சயமாக விளையாடும். இப்போதே நாம் தான் கோப்பையை வெல்வோம், அதற்கான வாய்ப்பு எங்களுக்கே அதிகம் என்று அடித்து சொல்ல முடியாது. அதே சமயம் இந்திய அணி மிக வலுவானது என்பதிலும் சந்தேகம் இல்லை. இதயம் ஒன்றை சொன்னாலும், நாம் கடினமான உழைக்க வேண்டியது அவசியம் என்கிறது மனம். எனக்கு நமது அணியை பற்றி நன்றாகத் தெரியும். ஆனால், மற்ற அணிகளை பற்றி முழுமையாகத் தெரியாத நிலையில் கருத்து சொல்வது சரியாக இருக்காது.

இந்திய அணியை பொறுத்தவரை, பெரிய தொடர்களில் சிறப்பாக விளையாடி சாம்பியன் பட்டம் வெல்வதற்கு தயாராக உள்ளது. நமது வீரர்கள் தன்னம்பிக்கையுடனும், உற்சாகமாகவும் அனுபவித்து விளையாட வேண்டும். ஆசிய கோப்பை பைனலில் சிராஜ் பந்துவீச்சு அமர்க்களமாக இருந்தது. உலகம் முழுவதும் உள்ள ஆடுகளங்களில், நமது வேகப் பந்துவீச்சாளர்கள் ஒட்டுமொத்தமாக பத்து விக்கெட்டையும் சாய்க்கும் அளவுக்கு மிகச் சிறப்பாக செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

நமது அணி சுழற்பந்துவீச்சாளர்களை மட்டுமே நம்பியிருந்த காலம் ஒன்று இருந்தது. அந்த காலம் இப்போது மலையேறிவிட்டது. அதனால் தான் இந்திய அணியின் வலிமை பன்மடங்காக அதிகரித்துள்ளது. எந்த ஒரு அணியாக இருந்தாலும், முன்னணி வீரர்கள் சிலர் காயம் அடையும்போது நிச்சயமாக பின்னடைவு ஏற்படும். அப்படி எதுவும் நிகழாமல் இருப்பதற்கு தான் அதிர்ஷ்டத்தின் துணை தேவைப்படுகிறது. தொடக்க வீரர் கில் அற்புதமாக விளையாடி வருகிறார். இந்திய அணியின் எதிர்காலம் அவர் தான். இவ்வளவு திறமை வாய்ந்த ஒரு வீரர் இந்திய அணியில் இருப்பது பெருமையாக உள்ளது.

சில வீரர்கள் தேர்வு செய்யப்படாதது குறித்து சொல்வதற்கு எதுவும் இல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கருத்து இருக்கும். தேர்வுக் குழுவினர் அவர்களது பணியை செய்கின்றனர், அதில் தலையிடக் கூடாது என கபில் தேவ் கூறியுள்ளார். உலக கோப்பை தொடர் அக்.5ம் தேதி தொடங்க உள்ள நிலையில், அதற்கு முன்பாக 3 ஒருநாள் போட்டிகளில் இந்திய அணி ஆஸ்திரேலியாவுடன் மோத உள்ளது. அதைத் தொடர்ந்து, உலக கோப்பைக்கான 2 பயிற்சி ஆட்டங்களில் செப்.30ம் தேதி இங்கிலாந்து அணியையும் (கவுகாத்தி), அக்.3ம் தேதி நெதர்லாந்து அணியையும் (திருவனந்தபுரம்) சந்திக்கிறது.

# சிங்கப்பூர் பார்முலா 1 செய்ன்ஸ் சாம்பியன்



**சிங்கப்பூர் : செப். 20,**
**சிங்கப்பூர் பார்முலா 1 கார் பந்தயத்தில் பெராரி அணி வீரர் கார்லோஸ் செய்ன்ஸ் சாம்பியன் பட்டம் வென்றார்.**

மொத்தம் 63 சுற்றுகள் (லேப்) கொண்ட பந்தயத்தை, கார்லோஸ் 1 மணி, 46 நிமிடம், 37 விநாடிகளில் நிறைவு செய்து முதலிடம் பிடித்தார். மெக்லாரென் மெர்சிடிஸ் வீரர் லாண்டோ நோரிஸ் 2வது இடமும், மெர்சிடிஸ் அணி நட்சத்திரம் லூயிஸ் ஹாமில்டன் 3வது இடமும் பிடித்தனர்.

இதுவரை நடந்துள்ள பந்தயங்களின் முடிவில் ரெட் புல் ரேசிங் ஹோண்டா வீரர் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் (374 புள்ள்) முன்னிலை வகிக்கிறார். சக வீரர் செர்ஜியோ பெரஸ் (223) 2வது இடத்திலும், லூயிஸ் ஹாமில்டன் (180) 3வது இடத்திலும் உள்ளனர்.

# ஆசிய விளையாட்டு போட்டிகள் கால்பந்து போட்டியில் இந்தியவை வீழ்த்தியது சீனா



**பெய்ஜிங் : செப். 20,**
**ஆசியன் கேம்ஸ் கால்பந்து போட்டியில் இந்திய அணியை 5-1 என்ற செட் கணக்கில் சீன அணி வீழ்த்தியது.**

ஆசியன் கேம்ஸ் கால்பந்து போட்டியில் இந்திய அணியை 5-1 என்ற செட் கணக்கில் சீன அணி வீழ்த்தியது. ஆட்டத்தின் முதல் பாதியில் 1-1 என சமநிலையில் இருந்த நிலையில் இரண்டாவது பாதியில் சீன அணி 4 கோல்களை அடித்து ஆதிக்கம் செலுத்தியது. இதனால், 5-1 என்ற கணக்கில் சீனா வென்றது.

சீன அணியில் கியான்லோங் டோ இரண்டு கோல்களையும் கோ தியான்யி, வெய்ஜுன் டேய், மற்றும் ஹாவோ பங் தலா ஒரு கோலும் அடித்தனர். இந்திய அணி தரப்பில் முதல் பாதியில் ராகுல் கேபி ஒரு கோல் மட்டும் அடித்தார்.

## ஆஸ்திரேலியா தொடர் அஸ்வினை தேர்வு செய்ய

# ரோகித் சர்மா தான் காரணம்



**மும்பை : செப். 20,**
**2023 உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாக இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆட உள்ளது.**

இந்தப் தொடருக்கான அணியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட உலகக்கோப்பை அணியில் இடம் பெற்று இருக்கும் வீரர்களுக்கு மட்டுமே வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், உலகக்கோப்பையில் இல்லாத பல வீரர்களுக்கு அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அதில் யாருமே எதிர்பாராத வகையில் கடந்த 18 மாதங்களாக ஒருநாள் அணியில் இடம் பெறாத சுழற் பந்துவீச்சாளர் அஸ்வினுக்கு அணியில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

உலகக்கோப்பையில் இடம் பெற்றுள்ள வீரர்களில் சுழற் பந்துவீச்சு ஆல்-ரவுண்டரான அக்சர் படேலுக்கு காயம் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய கோப்பை தொடரில் வங்கதேச அணிக்கு எதிரான போட்டியில் அவருக்கு காயம் ஏற்பட்டது. அவர் உலகக்கோப்பை தொடருக்கு முன்னதாக அணிக்கு திரும்ப வாய்ப்பு உள்ளது. ஆனால், அவருக்கு மாற்றாக ஒரு சுழற்பந்துவீச்சு ஆல்-ரவுண்டர் தேவை என்பதில் தெளிவாக இருந்த கேப்டன் ரோகித் சர்மா, ஆசிய கோப்பை தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னதாக வாஷிங்டன் சுந்தரை அணியில் சேர்த்தார். அவருக்கு இறுதிப் போட்டியில் ஆடும் வாய்ப்பும் கிடைத்தது. ஆனால், இந்திய அணி சுழற் பந்துவீச்சு ஆல் ரவுண்டர் தான் தேவை என்பதில் தெளிவாக இருப்பதால், ஒருவேளை சுந்தருக்கும் உலகக்கோப்பை தொடரில் காயம் ஏற்பட்டால் என்ன செய்வது என முன்னெச்சரிக்கையாக சிந்திக்கத் தொடங்கியது. அதன் காரணமாகவே அஸ்வினை இந்திய அணியில் சேர்க்க முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு ஆசிய கோப்பை தொடரில் ஆட வாஷிங்டன் சுந்தரை அழைத்த போதே எடுக்கப்பட்டுவிட்டதாக தற்போது தெரிய வந்துள்ளது. குறிப்பாக, நீண்ட நாட்கள் அணியில் ஆடாத அஸ்வினை உலகக்கோப்பை அணிக்கான அறிவிக்கப்படாத ரிசர்வ் வீரராக தேர்வு செய்ய காரணம் அவரது அனுபவம் தான். அவர் தொடர்ந்து டிஎன்பிஎல், ஐபிஎல் போன்ற டி20 தொடர்களிலும் பங்கேற்று வருகிறார். எனவே அஸ்வின் உலகக்கோப்பை தொடருக்கு முன் ஆஸ்திரேலிய ஒருநாள் தொடரில் வாய்ப்பு பெற முக்கிய காரணம், கேப்டன் ரோகித் சர்மாவின் உலகக்கோப்பை பயம் தான் என கூறப்படுகிறது. அக்சர் படேல் ஆடாத நிலையில் நிச்சயம் வாஷிங்டன் சுந்தர் தான் அந்த இடத்துக்கான அணியின் முதன்மை தேர்வாக இருப்பார். அவரும் ஆட முடியாத நிலை ஏற்பட்டால் மட்டுமே அஸ்வினுக்கு உலகக்கோப்பை அணியில் இடம் கிடைக்கும்.

## விராட், ரோகித், பும்ரா, குல்தீப்பை விட இவர்தான் உலகக்கோப்பையில்

# இந்தியாவின் கேம் சேஞ்சர் வாசிம் அக்ரம் கணிப்பு



**லாகூர் : செப். 20,**
**இந்தியாவில் வரும் அக்டோபர் மாதம் ஐசிசி உலகக்கோப்பை தொடர் தொடங்குகிறது.**

50 ஓவர் உலகக்கோப்பை தொடர் இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற உள்ளது. உலகக்கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் அக்டோபர் 5ம் தேதி இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சென்னையில் சந்திக்கிறது. இந்நிலையில் சொந்த மண்ணில் நடைபெறும் இந்த உலகக்கோப்பையில் ஆல் ரவுண்டர் ஹர்திக் பாண்டியா தான் ஆட்டத்தை மாற்றும் இந்திய வீரராக இருப்பார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் வாசிம் அக்ரம் கணித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசும்போது அடுத்து நடைபெறும் உலகக்கோப்பையில் விராட், ரோகித், பும்ரா, குல்தீப்பை விட ஹர்திக் பாண்டியா தான் இந்திய அணியின் ஆட்டத்தை மாற்றுபவராக இருப்பார். பேட்டிங், பவுலிங் துறைகளில் அசத்தும் இந்தியாவின் முக்கிய வீரராக இருப்பார். அவரை போன்ற வீரர்களால் உலகக் கோப்பையை வெல்லும் அணிகளில் முதன்மையானதாக இந்தியா இருக்கும். மேலும் இளம் வீரர்கள் சொந்த மண்ணில் விளையாடுவதால் சிறப்பாக செயல்பட அதிக வாய்ப்புள்ளது.

அதே போல இந்திய அணியின் பவுலர்கள் என்ன செய்வார்கள் என்பதை இத்தொடரில் நாம் பார்த்தோம். குறிப்பாக ஆசிய கோப்பையில் பெரிய அணிகளுக்கு எதிராக குல்தீப் நிறைய விக்கெட்டுகளை எடுத்தார். எனவே இந்திய அணி சிறப்பாக செயல்பட்டுள்ளது. அதனால் இந்திய அணியை ஆதரிப்பவர்களுக்கு உலகக்கோப்பைக்கு முன்பாக நல்ல அணி கிடைத்துள்ளது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று வாசிம் அக்ரம் கூறினார்.

# புதிய போஸ்டர் வெளியிட்டு ரசிகர்களை உற்சாகப்படுத்திய ‘ஹனு மான்’ படக்குழு



**சென்னை : செப். 20,**
**இயக்குனர் பிரசாந்த் வர்மா இயக்கத்தில் தயாராகியிருக்கும் படம் ‘ஹனு-மான்’.**

இதில் தேஜா சஜ்ஜா கதையின் நாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக நடிகை அமிர்தா ஐயர் நடிக்கிறார். இவர்களுடன் வரலட்சுமி சரத்குமார், வினய் ராய், கெட்டப் சீனு, ராஜ் தீபக் ஷெட்டி உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். தாசரதி சிவேந்திரா ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு கௌரஹரி, அனுதீப் தேவ் மற்றும் கிருஷ்ண சவுரப் என மூன்று இசையமைப்பாளர்கள் இணைந்து இசையமைத் திருக்கிறார்கள்.

இப்படத்தை ப்ரைம் ஷோ என்டர்டெய்ன்மென்ட் எனும் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் கே.நிரஞ்சன் ரெட்டி தயாரித்துள்ளார். இப்படம் 2024-ஆம் ஆண்டு ஜனவரி 12-ஆம் தேதி தெலுங்கு, இந்தி, மராத்தி, தமிழ், கன்னடம், மலையாளம் மொழிகளில் பான் இந்திய திரைப்படமாக வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ‘ஹனுமான்’ பட தயாரிப்பு நிறுவனம் ரசிகர்கள் அனைவருக்கும் விநாயகர் சதுர்த்தி வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். பண்டிகை கொண்டாட்டமாக ஒரு கச்சிதமான போஸ்டரை வெளியிட்டு, படத்திற்கான விளம்பரங்களைத் தொடங்கியுள்ளனர். இந்த போஸ்டரில் தேஜா சஜ்ஜா ஒரு மாறுபட்ட பாரம்பரிய அவதாரத்தில் தோன்றியுள்ளார். மேலும் அவர் விநாயகர் சதுர்த்தி விழாவை, ஒரு பெரிய கூட்டத்துடன் கொண்டாடுகிறார். இந்த போஸ்டரை ரசிகர்கள் ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

# ரூ.900 கோடி வசூலை நெருங்கும் ‘ஜவான்’



**மும்பை : செப். 20,**
**ஜவான்’ திரைப்படம், ரூ.883.68 கோடியை வசூலித்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.**

ராஜா ராணி, தெறி, மெர்சல், பிகில் என தமிழில் வசூல் ரீதியாக தொடர் வெற்றிப் படங்களைக் கொடுத்தவர் அட்லீ. இவர் தற்போது ஷாருக்கான் நடிப்பில் ‘ஜவான்’ படத்தை இயக்கியுள்ளார். ‘ஜவான்’ படத்தில் ஷாருக்கானுடன் நயன்தாரா, விஜய் சேதுபதி இருவரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

மேலும் தீபிகாபடுகோனே, யோகிபாபு, பிரியாமணி, சஞ்சய் தத் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்தி, தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளில் ‘ஜவான்’ திரைப்படம் உலகம் முழுவதும் கடந்த செப்டம்பர் 7-ந்தேதி திரையரங்குகளில் வெளியானது. ‘ஜவான்’ திரைப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

தொடர்ந்து ‘ஜவான்’ திரைப்படம் உலகளவில் வசூலை குவித்து வருவதாக படக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி ‘ஜவான்’ திரைப்படம், வெளியான 12 நாட்களில் ரூ.883.68 கோடியை வசூலித்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

வரலாறு சினிமா

# எனக்கு எந்த ஒரு இன்ஸ்டாகிராம் கணக்கும் இல்லை பாலா கமிஷனர் அலுவலகத்தில் புகார்




**சென்னை : செப். 20,**
**சேது, நந்தா, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன் உள்ளிட்ட பல படங்களை இயக்கிய பாலா, தற்போது ‘வணங்கான்’ படத்தை இயக்கி வருகிறார்.**

அருண் விஜய் கதாநாயகனாக நடிக்கும் இந்தப் படத்தில், ரோஷினி பிரகாஷ் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், சமுத்திரக்கனி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், இயக்குனர் பாலா பெயரில் போலியாக கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. இது குறித்து அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், “எனக்கு எந்த ஒரு இன்ஸ்டாகிராம் கணக்கும் இல்லை.. மோசடி நபர்களிடம் ஏமாற வேண்டாம்... பாலா எச்சரிக்கை.

தற்போது இயக்குனர் பாலாவின் பெயரில் யாரோ ஒரு மர்ம நபர் போலி இன்ஸ்டாகிராம் பக்கத்தை உருவாக்கி புகைப்படங்கள் மற்றும் தகவல்களை வெளியிட்டு வருகிறார். பாலசுப்பிரமணியன் பழனிச்சாமி என்ற கணக்கில் இயக்குனர் பாலா எனக் கூறிக்கொண்டு முறையற்ற செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும், குறிப்பாக திரைப்படங்களில் நடிக்கும் ஆர்வமுள்ள பெண்களிடம் தனிப்பட்ட முறையில் குறுஞ்செய்திகள் மூலமாக உரையாடி அவர்களுக்கு வாய்ப்பு தருவதாக கூறி தவறான நோக்கத்தில் பேசியதுடன் மட்டுமல்லாமல் கவர்ச்சியான புகைப்படங்களையும் கேட்டுள்ளார். இதுகுறித்து உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் இயக்குனர் பாலாவின் கவனத்திற்கு வந்தன.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படியும் தன் பெயரில் உள்ள போலியான அந்த கணக்கை முடக்கும்படியும் இயக்குனர் பாலா சென்னை கமிஷனர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். பொதுவாக தனது திரைப்படங்களில் நடிப்பவர்களுக்கான தேர்வை அவரின் உதவி இயக்குனர்கள் மற்றும் மேலாளர்கள் மட்டுமே நேரடியாக தொடர்புகொண்டு வருகிறார்கள். அதனால் சினிமா ஆர்வம் உள்ளவர்கள், குறிப்பாக தனது திரைப்படங்களில் நடிக்க விரும்புபவர்கள் இது போன்ற போலியான நபர்களை நம்பி ஏமாற வேண்டாம்.. விழிப்புணர்வுடன் இருங்கள் என்று இயக்குனர் பாலா கேட்டுக் கொண்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.



வரலாறு உலகம்

## யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்ட இந்தியாவின் ஒய்சாலா கோவில்கள்



**பாரீஸ் : செப். 20,**

**யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் இந்தியாவில் உள்ள ஒய்சாலா கோவில்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.**

கர்நாடகாவின் ஒய்சாலா கோவில்கள் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன. கர்நாடகாவின் பேலூர், ஹாலேபித் மற்றும் சோம்நாத்புரம் ஆகியவற்றின் ஒய்சாலா கோவில்கள் இந்த பட்டியலில் இடம் பெற்று உள்ளன. இதனால், இந்தியாவின் 42-வது யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலம் என்ற அந்தஸ்து கிடைத்து உள்ளது.

இதுபற்றி யுனெஸ்கோ வெளியிட்டு உள்ள எக்ஸ் பதிவில், இந்தியாவில் உள்ள ஒய்சாலா கோவில்கள் யுனெஸ்கோவின் பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளன. வாழ்த்துகள் என தெரிவித்து உள்ளது.

இதற்கு வாழ்த்து தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், இந்தியாவுக்கு அதிக பெருமை கிடைத்துள்ளது. யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில், பிரமிக்க செய்யும் புனித தோற்றம் கொண்ட ஒய்சாலா கோவில்கள் சேர்க்கப்பட்டு உள்ளன என தெரிவித்து உள்ளார். காலவரையற்ற அழகு மற்றும் சிக்கலான விவரங்களை கொண்ட ஒய்சாலா கோவில்கள் இந்தியாவின் கலாசார பாரம்பரிய செறிவுக்கான தக்க சான்றாக உள்ளது.

நம்முடைய முன்னோர்களின் தனிச்சிறப்புடனான கைவினை திறனை விளக்கும் வகையிலும் உள்ளன என அவர் தெரிவித்து உள்ளார். சமீபத்தில், யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் மேற்கு வங்காளத்தின் சாந்திநிகேதன் சேர்க்கப்பட்டு உள்ளது என அறிவிக்கப்பட்டது. மேற்கு வங்காளத்தின் பீர்பும் மாவட்டத்தில் அமைந்துள்ள சாந்திநிகேதன், கவிஞர் மற்றும் தத்துவயியலாளரான ரவீந்திரநாத் தாகூரால், கடந்த 1901-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான சுற்றுலாவாசிகள் இந்த பகுதிக்கு வந்து பார்வையிட்டு செல்வது வழக்கம். இந்த கலாசார தலத்திற்கு யுனெஸ்கோ அங்கீகாரம் கிடைப்பதற்காக நீண்டகாலம் வரை இந்தியா போராடி வந்தது. இந்நிலையில், யுனெஸ்கோவின் பாரம்பரிய கமிட்டி சார்பில் 45-வது கூட்டத்தொடர் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் கடந்த 17-ந்தேதி நடந்தது. இதில், மேற்கு வங்காளத்தின் சாந்திநிகேதன் யுனெஸ்கோ உலக பாரம்பரிய பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளது என அறிவிக்கப்பட்டது.

## கனடாவில் காலிஸ்தானிய தலைவர் படுகொலை
## இந்திய அரசின் ஏஜெண்டுகளுக்கு தொடர்பு ட்ரூடோ குற்றச்சாட்டு



**ஒட்டாவா : செப். 20,**

**கனடாவில் காலிஸ்தானிய தலைவர் படுகொலை சம்பவத்தில் இந்திய அரசின் ஏஜெண்டுகளுக்கு உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடந்துவருகிறது என பிரதமர் ட்ரூடோ கூறியுள்ளார்.**

கனடா நாட்டில் இந்து கோவில்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன என நீண்டகால குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த தாக்குதல்களில் காலிஸ்தானியர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. கனடாவில் இந்து கோவில்கள் மீது முகமூடி அணிந்த மர்ம நபர்கள் சிலர் தாக்குதல் நடத்தும் வீடியோக்களும் வெளிவந்து பரபரப்பு ஏற்படுத்தின.

இந்நிலையில், கடந்த ஜூன் மாதத்தில் கனடாவின் சுர்ரே நகரில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் என்ற காலிஸ்தானிய தலைவர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். இந்தியாவால் தேடப்படும் பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்ட அவர், கனடாவின் குடிமகனாகவும் இருந்துள்ளார். சுர்ரே நகர குரு நானக் சீக்கிய குருத்வாராவின் தலைவராகவும் செயல்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில், இவருடைய படுகொலையில் இந்திய அரசின் ஏஜெண்டுகளுக்கு தொடர்பு உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதுபற்றி கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறும்போது, இந்திய அரசின் ஏஜெண்டுகளுக்கும் கனடா குடிமகனின் படுகொலைக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி கனடா பாதுகாப்பு முகமைகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றன என கூறினார்.

கனடாவில் குடிமகன் ஒருவர் படுகொலையில் அந்நியர் ஒருவரின் அல்லது வெளிநாட்டு அரசின் தொடர்பு இருப்பது என்பது ஏற்று கொள்ள முடியாதது என்று அவர் அழுத்தி கூறினார். இதனால், சில இந்தோ-கனடியர்கள் கோபத்தில் உள்ளனர் என்றும் அச்சத்திலும் உள்ளனர் என்றும் கூறியுள்ளார். இந்த விவகாரத்தில், உண்மை விவரங்கள் தெரிய, கனடாவுக்கு இந்திய அரசு ஒத்துழைப்பு தரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

## அமெரிக்காவில் 2 மாடல் அழகிகள் மர்ம மரணம் சீரியல் கில்லருக்கு தொடர்பா



**லாஸ் ஏஞ்சல்ஸ் : செப். 20,**

**அமெரிக்காவில் 2 மாடல் அழகிகள் அடுத்தடுத்து மர்ம மரணம் அடைந்தது பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.**

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பங்கர் ஹில் பகுதியில் ஆடம்பர ரக அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வசித்து வந்தவர் மலீசா மூனி (வயது 31). மாடல் அழகியான இவர், கடந்த 12-ந்தேதி அவருடைய குடியிருப்பில் மர்ம மரணம் அடைந்துகிடந்துள்ளார். இந்த சம்பவம் நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன், கடந்த 10-ந்தேதி நிக்கோல் கோட்ஸ் (வயது 32) என்பவர் அவருடைய குடியிருப்பில் உயிரிழந்து கிடந்துள்ளார். இந்த இரண்டு சம்பவங்களை பற்றியும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகொலையாக இருக்க கூடும் என்று நிக்கோலின் உறவினரான மே ஸ்டீவன்ஸ் கூறியுள்ளார். அவருடைய ஒரு கால், உதைப்பது போன்று மேல்நோக்கி இருந்துள்ளது. இது அவருடைய மரணத்தில் பெரிய சந்தேகம் கிளப்பி உள்ளது. இது படுகொலை என்ற கோணத்தில் போலீசாரின் விசாரணை நடைபெறவில்லை என்றபோதிலும், மகள் மரணத்தில் தொடர்புடையவர்களை ஒவ்வொருவரும் கண்டுபிடிக்க வேண்டும் என்று நிக்கோலின் தாயார் ஷரோன் கோட்ஸ் கூறியுள்ளார்.

இருவரின் உறவினர்களும், இதனை ஒரு சீரியல் கில்லர் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகம் தெரிவித்து உள்ளனர். அடுத்து, வேறு யாரும் இதற்கு இலக்காக கூடிய சாத்தியமும் உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்து உள்ளனர். இந்த இருவரும் ஒரு மைல் தொலைவுக்கு இடைப்பட்ட இடத்தில் தங்கியிருந்து உள்ளனர். இதனால், சீரியல் கில்லரின் தொடர்பு பற்றியும் போலீசாரின் விசாரணை நடந்து வருகிறது.

## ஆக்கபூர்வமான 2 நாட்கள் இந்தியாவை பாராட்டும் அமெரிக்கா



**அமெரிக்கா : செப். 20,**

**ஜி20 கூட்டமைப்பின் 18-வது உச்சி மாநாடு இந்திய தலைநகர் புது டெல்லியில் இம்மாதம் 9, 10 தேதிகளில் நடைபெற்றது.**

இதில் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து உட்பட பல உறுப்பினர் நாட்டு அதிபர்கள் கலந்து கொண்டனர். இந்நிலையில், அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபையின் ராஜாங்க பேச்சுவார்த்தைகளுக்கான ஒருங்கிணைப்பாளர் ஜான் கிர்பி ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பின் பொது சபைக்கான 78-வது அமர்வில் உரையாற்றினார்.

அவர் ஆற்றிய உரையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியாவில் ஜி20 மாநாட்டில் கலந்து கொண்ட பிறகு உலகம் பயணிக்க வேண்டிய திசை குறித்து தன்னம்பிக்கையுடனும், நேர்மறையான எண்ணங்களுடனும் செயல்பட்டு வருகிறார். பெரும் செயல்கள் ஜி20 மாநாட்டில் செய்து முடிக்கப்பட்டன.

இதற்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும், தலைமையேற்ற இந்தியாவிற்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். திட்டமிடுதல் மட்டுமல்லாது செயல்படுத்தலிலும் இந்தியா சிறப்பாக செயல்பட்டது. இந்தியாவில் இருந்த 2 நாட்களும் மிக மிக ஆக்கபூர்வமான நாட்களாக இருந்தது என ஜான் கிர்பி கூறினார். ஜி20 உச்சி மாநாட்டிற்கு வருகை தந்த போது அமெரிக்க அதிபர் ஜோ பைடனும், இந்திய பிரதமரும் பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷியா மற்றும் சீன வெளியுறவு மந்திரிகள் சந்திப்பு
## உக்ரைன் போர் சூழல் பற்றி ஆலோசனை



**மாஸ்கோ : செப். 20,**

**ரஷியா மற்றும் சீன வெளியுறவு மந்திரிகள் சந்திப்பில் உக்ரைன் போர் பற்றி ஆலோசிக்க கூடும் என கூறப்படுகிறது.**

உக்ரைனுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை என்ற பெயரில் ரஷியா படையெடுத்து ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதனால், எரிபொருள், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை உலக நாடுகள் சந்தித்து வருகின்றன.

இந்நிலையில், ரஷியாவுக்கு, சீன வெளியுறவு மந்திரி வாங் யி 4 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக நேற்று முன்தினம் திங்கள்கிழமை ரஷியாவை சென்றடைந்த அவர் அந்நாட்டு வெளியுறவு மந்திரி செர்கேவை நேரில் சந்தித்துபேசினார். இதுபற்றி ரஷியாவின் வெளிவிவகார அமைச்சகம் எக்ஸ் சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், வெளியுறவு மந்திரிகள் செர்கே லாவ்ரவ் மற்றும் சீன வெளியுறவு மந்திரி வாங் யி ஆகியோர் சந்தித்து பேசி கொண்டனர் என தெரிவித்து உள்ளது.

உக்ரைன் மற்றும் ரஷியா இடையேயான போர், ஒன்றரை ஆண்டுகளாக நீடித்து வரும் சூழலில், இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகள் செயல்பட்டு வருகின்றன. ஆயுதம், நிதி உள்ளிட்ட உதவிகளையும் செய்து வருகின்றன. பொருளாதார தடைகளையும் விதித்து நெருக்கடி அளிக்க முயன்றன. எனினும், இரு நாடுகள் இடையே போர் நிறுத்தம் ஏற்படாமல் தொடர்ந்து வருகிறது.

இந்நிலையில், ரஷியாவுக்கு ஆதரவாக வடகொரியா மற்றும் சீனா நாடுகள் உள்ளன. சமீபத்தில் ரஷியாவுக்கு சென்ற வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன், அதிபர் புதினை சந்தித்து பேசினார். இந்த போரில் ரஷியா வெற்றி பெறும் என்ற வகையில் பேசியது சர்ச்சை ஏற்படுத்தியது. இதுபற்றி சமீபத்தில் அமெரிக்க வெளியுறவு துறையின் செய்தி தொடர்பாளர் மேத்யூ மில்லர் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும்போது, வடகொரியா மற்றும் ரஷியா இடையேயான ஆயுத விற்பனைக்கு எதிராக நாங்கள் முன்பே தடைகளை விதித்து இருக்கிறோம். தேவைப்பட்டால், கூடுதல் தடைகளை விதிக்கவும் நாங்கள் தயங்கமாட்டோம் என கூறினார். இந்த சூழலில், சீன வெளியுறவு மந்திரியின் பயணம் அமைந்துள்ளது. ரஷியா மற்றும் சீன வெளியுறவு மந்திரிகள் சந்திப்பில் உக்ரைன் போர் பற்றி ஆலோசிக்க கூடும் என கூறப்படுகிறது.

## சீனாவின் எல்லை தாண்டும் விமான ஒத்திகையால் பதட்டத்தில் தைவான்



**சீனா : செப். 20,**

**கிழக்கு ஆசியாவில் உள்ள நாடு, தைவான். தைவானை தங்களது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா, நீண்டகாலமாக சொந்தம் கொண்டாடி வருகிறது.**

இதனை ஏற்க மறுத்து தைவான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இவ்விவகாரத்தில் தைவானுக்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளதால் சீனா கடுங்கோபத்தில் உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு தைவானை சுற்றியுள்ள கடற்பகுதியில் சீனா அத்துமீறி போர் பயிற்சிகளை மேற்கொண்டதால் பதற்றம் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து திங்கட்கிழமை வரையில் 103 போர் விமானங்களை கொண்டு போர் பயிற்சியை தைவானின் வான் பகுதியில் சீனா மேற்கொண்டது. நேற்றிலிருந்து இன்று வரை சீனா மேலும் 55 போர் விமானங்களின் பயிற்சியை மேற்கொண்டதுடன் தைவானை சுற்றியுள்ள கடற்பகுதியில் 7 போர்கப்பல்களை கொண்டு பயிற்சி ஓட்டத்தில் ஈடுபட்டது.

அந்த 55 போர் விமானங்களில், பாதி விமானங்களுக்கு மேற்பட்டவை, சீனாவையும் தைவானையும் பிரிக்கும் தைவான் ஜலசந்தி பகுதியின் மத்திய எல்லை கோட்டை தாண்டி, தைவானின் தென்கிழக்கு மற்றும் தென்மேற்கு வான் பாதுகாப்பு அடையாள எல்லை வரை நுழைந்ததாக தைவான் அறிவித்திருக்கிறது. இதனையடுத்து, போர் பதட்டத்தைதூண்டிவருவதாக சீனா மீது தைவான் மீண்டும் குற்றம்சாட்டியுள்ளது. போர் விமானங்களின் பயிற்சி குறித்து கருத்து தெரிவிக்காத சீன வெளியுறவுத்துறை, “தைவான், சீனாவிற்கு சொந்தமானது” என மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மேலும், தைவான் குறிப்பிடும் மத்திய எல்லைக்கோட்டு பகுதி என எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. சமீபத்தில் தைவான் ஜலசந்தி பகுதியில் கனடா மற்றும் அமெரிக்காவிற்கு சொந்தமான 2 கப்பல்கள் பயணம் மேற்கொண்டதையடுத்து தனது துருப்புகளுக்கு சீனா எச்சரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது.

## ரஷியாவிற்கு இங்கு இன்னும் இடம் எதற்கு
## ஐ.நா. கூட்டத்தில் கேள்வி எழுப்பிய உக்ரைன் அதிபர்



**அமெரிக்கா : செப். 20,**

**உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் நடத்தி வரும் நிலையில், உலகத் தலைவர்களின் ஆதரவை ஜெலன்ஸ்கி நாடி வருகிறார்.**

மேலும், ரஷியாவை தனிமைப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். ஆனால், ராணுவ உதவிகளை செய்து வரும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள், உறுதியான எதிர் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. நேட்டோ படையில் சேர்ப்பதாக தெரிவித்து, அதன் மாநாட்டில் அதுகுறித்து முடிவு எடுக்கப்படாமல் விடப்பட்டது.

ஐ.நா. கண்டனம் தெரிவித்த போதிலும் ரஷியா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்காவில் ஐ.நா.வின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கலந்து கொண்டார். அப்போது அவர் பேசும்போது கூறியதாவது : எங்களை பொறுத்தவரை, எங்குடைய அனைத்து வார்த்தைகள், அனைத்து மெசேஜ்கள் அனைத்தையும் எங்களுடைய பார்ட்னர்களால் கேட்கப்படுவது மிகவும் முக்கியம்.

இன்னும் ஐ.நா. அவையில் ரஷியா உறுப்பினர்கள் இருந்தால் அது பரிதாபத்திற்குரியது. ஆனால், இருக்கிறார்கள். ரஷிய பயங்கரவாதிகளுக்காக இங்கே இடம் இருக்கிறது. இந்த கேள்வி எனக்கானது அல்ல. ஐ.நா. அவையில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்குமான கேள்வி என நான் நினைக்கிறேன் என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

## நான் வயது குறைந்தவன் என்பதால் மிகவும் விமர்சிக்கப்படுகிறேன் விவேக் ராமசாமி



**அமெரிக்கா : செப். 20,**

**அமெரிக்காவில், அடுத்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.**

இத்தேர்தலில் வெற்றி பெற ஆளும் ஜனநாயக கட்சியின் சார்பில் தற்போதைய அதிபர் ஜோ பைடனும் குடியரசு கட்சியின் சார்பில் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் தீவிரமாக போட்டி போட்டு வருகின்றனர். ஆனால், டொனால்ட் டிரம்ப் மீது பதிவாகியுள்ள கிரிமினல் வழக்குகளின் தீர்ப்பை பொறுத்தே அவரது தகுதி நிர்ணயிக்கப்படும் எனும் நிலை உள்ளது. இதனால் குடியரசு கட்சியில் அவருக்கு அடுத்த நிலையில் உள்ள இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெரிக்கரான 38-வயதான விவேக் ராமசாமிக்கு ஆதரவு நாளுக்கு நாள் கூடி வருகிறது. பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர் தெரிவித்து வரும் ஆணித்தரமான, துணிச்சலான கருத்துக்களால் அவருக்கு எதிர்ப்பும் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் ஒரு தனியார் தொலைக்காட்சி பேட்டியில் தனது மீதான விமர்சனங்களை குறித்து விவேக் ராமசாமி கருத்து தெரிவித்தார். அப்போது அவர் எனது வளர்ச்சி பலருக்கு பொறாமையை ஏற்படுத்தியுள்ளது. எனது குறைந்த வயது காரணமாக நான் இந்த பதவிக்கு தகுதியானவன் அல்ல என சிலர் நினைக்கின்றனர். சுதந்திர பிரகடனத்தை (Declaration of Independence) எழுதும் போது அப்போதைய அதிபர் தாமஸ் ஜெபர்ஸன், 33 வயதே ஆனவர் என்பதை நாம் அறிவோம். குறைந்த வயதுள்ளவர்கள் அவர்களது வாழ்நாளில் இனிமேல்தான் சிறப்பான நாட்களை எதிர்கொள்ள போகிறார்கள். எனவே, தனது வாழ்நாளின் சிறப்பான நாட்களை எதிர்கொள்ளும் வாய்ப்புள்ள ஒருவர்தான் ஒரு நாட்டிற்கு கிடைக்க போகும் சிறப்பான எதிர்கால நாட்களையும் உருவாக்கிதர முடியும். சிறப்பான தகுதி, மேன்மையை தேடுதல், பொருளாதார வளர்ச்சி, கருத்து சுதந்திரம் மற்றும் வெளிப்படையான விவாதம் போன்ற அடிப்படை விஷயங்களைத்தான் அமெரிக்கர்கள் இன்னமும் மதிக்கிறார்கள். இதனை நிலைநிறுத்துவதே எனது லட்சியம். வெறும் விமர்சனங்களை மட்டுமே முன்வைத்து அரசியல் செய்வதை நான் விரும்பவில்லை என விவேக் ராமசாமி தெரிவித்தார்.

## அமெரிக்காவில் அதிநவீன போர் விமானம் மாயமானதால் பரபரப்பு



**வாஷிங்டன் : செப். 20,**

**உலகின் மிகப்பெரிய விமான படையை கொண்டுள்ள நாடாக அமெரிக்கா திகழ்கிறது. இந்த படையில் அதிநவீன போர் விமானங்கள் உள்ளது.**

80 மில்லியன் டாலர் மதிப்பிலான எப்.35 ரக விமானம் சம்பவத்தன்று தென் கரோலினா கடலோர பகுதியில் சென்று கொண்டிருந்தது. திடீரென அந்த விமானத்துக்கும் கட்டுப்பாட்டு அறைக்கும் இடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த போர் விமானம் எங்கே சென்றது என தெரியவில்லை. அந்த விமானத்தில் இருந்த விமானி பாராசூட் மூலம் கீழே குதித்து உயிர் தப்பியதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதனால் விமானத்தின் நிலை என்ன என்பது மர்மமாக உள்ளது. அந்த விமானத்தை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது. நவீனரக போர் விமானம் மாயமான சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## அமெரிக்காவில் விமான சாகசத்தின்போது ஏற்பட்ட விபத்தில் 2 விமானிகள் பலி



**வாஷிங்டன் : செப். 20,**

**அமெரிக்காவின் நெவாடா மாகாணத்தில் ரெனோ விமான கண்காட்சி நடந்தது.**

இதில் ஏராளமான விமானங்கள் சாகசத்தில் ஈடுபட்டன. இதன் இறுதிப்போட்டியில் விமானங்கள் கலந்து கொண்டன. அப்போது தரை இறங்கும்போது 2 விமானங்கள் எதிர்பாராதவிதமாக மோதிக் கொண்டன. இதில் அந்த விமானங்கள் நொறுங்கின. இந்த விபத்தில் அதில் பயணித்த 2 விமானிகள் பரிதாபமாக இறந்தனர்.

தகவலறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்று 2 விமானிகளின் உடல்களை மீட்டனர். இறந்தவர்கள் பெயர் விவரங்கள், விபத்துக்கான காரணம் பற்றி எந்த தகவலும் வெளியிடப்படவில்லை. விபத்து தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.



# சட்டமன்றங்கள், நாடாளுமன்றத்தில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு

# நடிகர் விஜய் ஆண்டனியின் மகள் தூக்கிட்டு தற்கொலை







# நியூ மேக்ஸ் மோசடி: கைதான நிர்வாகிகளை காவலில் விசாரிக்க நடவடிக்கை


| சென்னை / புதுக்கோட்டை | 20.09.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**இரா. இராகவையங்கார்** , தமிழக நூலாசிரியர், உரையாசிரியர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர் (பி.1870) (இ.1946)



**ப. ராமமூர்த்தி** , இந்திய மார்க்சிய அரசியல்வாதி (பி.1908) (இ.1987)



**நாகேசுவரராவ்** , தென்னிந்திய நடிகர், தயாரிப்பாளர் (பி.1923) (இ.2014)




## இன்றைய நினைவு நாள்

**பர்கதுல்லா** , இந்திய விடுதலைப் போராட்ட வீரர், எழுத்தாளர் (பி.1854) (இ.1927)



**நாராயணகுரு** , இந்திய ஆன்மிகவாதி, சமூக சீர்திருத்தவாதி (பி.1855) (இ.1928)



**டி. ஆர். ராஜகுமாரி** , தமிழ்த் திரைப்பட நடிகை (பி.1922) (இ.1999)



**ஜக்மோகன் டால்மியா** , இந்தியத் தொழிலதிபர் (பி.1940) (இ.2015)

